# இருட்டில் வைத்த குறி

## 1

**சி**ங்கப்பூர்.

ஹோட்டல் ஒபராய் இம்பீரியல். பார்க்கிறவர்களின் மூச்சை நிறுத்தும் கட்டடம்.

பதினான்காவது மாடியில் 1401 எண் அறைக்குள் மார்த்தாண்டம் கொஞ்சம் உடைந்துபோன ஆங்கிலத்தில் 'பிரணவ் தலாலோ'விடம் சொல்லிக் கொண்டிருந்தார். ''இதோ பாருங்கள் மிஸ்டர் பிரணவ்! சிங்கப்பூரில் நீங்கள் இருபது வருஷகாலமாய் இருக்கிறவர். உங்களுக்கு இங்கே இருக்கிற எஸ்டேட் எஸ்டிமேஷன் அத்துபடி. என்னுடைய பாட்டனார் சொத்தான ரப்பர் தோட்டத்தை ஒரு நல்ல விலைக்கு விற்று, அதைக் காசாக்கிக் கொண்டு போவதற்குத்தான் நானும்



என்னுடைய இரண்டு மகன்களும் சிங்கப்பூர் வந்திருக்கிறோம். நாங்கள் ஏதோ அவசரத் தேவைக்காக ரப்பர் தோட்டத்தை விற்க வந்திருக்கிறோம் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள்.''

ஐம்பது வயது உடம்போடும், மஞ்சள் கிழங்கு நிறத்தோடும் எதிரே உட்கார்ந்திருந்த பிரணவ் சிரித்தார். மலாய் அஸ்ஸென்ட்டோடு ஆங்கிலத்தைச் சொதப்பலாய் பேசினார். ''மிஸ்டர் மார்த்தாண்டம்! நீங்கள் ஒன்றை மறந்துவிட்டுப் பேசுகிறீர்கள். கடந்த இரண்டு வருஷகாலமாய் மலேஷியாவிலும் சரி, சிங்கப்பூரிலும் சரி, ரப்பர் தோட்டங்கள் நல்ல விலைக்குப் போக மறுக்கின்றன. காரணம் செயற்கை ரப்பர் தயாரிப்பு. போதாக் குறைக்கு, நவீன பிளாஸ்டிக் தொழிற்சாலைகள். இயற்கையான ரப்பர் தோட்டங்கள் அழிக்கப்பட்டு அந்த இடங்களில் சொகுசு ஹோட்டல்கள் முளைக்கின்றன. ஆகவே சிங்கப்பூரை விட்டுத் தள்ளியிருக்கும் 'சேண்ட் ஷோ'வில் உள்ள உங்கள் ரப்பர் தோட்டத்திற்கு நல்ல விலை கிடைப்பது கஷ்டம்.''

மார்த்தாண்டத்திற்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த யோகேஷும், புவனேஷும் பிரணவ்வை ஏறிட்டார்கள். யோகேஷ் கேட்டான்.

''சரி, என்ன விலைக்குத்தான் போகும்?''

பிரணவ் பளிச்சென்று சொன்னார்.

''இந்திய ரூபாய் மதிப்பில் ஐந்து இலட்ச ரூபாய்.

''இந்த விலைக்கு மேல் சிங்கப்பூரில் யாரும் கொடுக்க மாட்டார்கள்.''

புவனேஷ், மார்த்தாண்டத்தை ஏறிட்டுத் தமிழில் பேசினான்: ''என்னப்பா, இவர் இப்படிச் சொல்றாரு? நாம எஸ்டிமேட் பண்ணின ரேட்டிலே பாதிக்குக் கூட இவர் வரலே?''

''இங்கே இருக்கிற நிலவரத்தைச் சொல்றார்.''

''நாம வேற புரோக்கரைக் காண்டாக்ட் பண்ணிப் பார்ப் போமா?''

''வேண்டாம். பிரணவ்வைப் பற்றி எனக்குத் தெரியும். அவர் சொன்னால் சரியா இருக்கும். வந்த விலைக்கு வித்துக் காசை வாங்கிக்கிட்டு மெட்ராஸ் போயிட வேண்டியதுதான்.''

இரண்டாவது மகன் யோகேஷ் கோபமாய்க் குறுக்கிட் டான். ''அஞ்சு லட்சம்கிறது அநியாய ரேட். நாம வேற யாரை யாவது கன்சல்ட் பண்ணிப் பார்க்கலாம்பா.''

தமிழ் புரியாத பிரணவ், மூன்று பேர்களின் முகங்களையும் மாறிமாறிப் பார்க்க மார்த்தாண்டம் அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டார். ''மிஸ்டர் பிரணவ்! நாங்கள் இன்னமும் மூன்று நாட்கள் இந்த சிங்கப்பூரில் இருக்கப் போகிறோம். நீங்கள் வேற பார்ட்டிகளை முயற்சி செய்து பாருங்கள். பத்து இலட்சம்வரைக்கும் சொல்லிப் பாருங்கள். நல்ல விலைக்கு விற்றுக் கொடுங்கள். கமிஷன் தொகையை வேண்டுமானால் சேர்த்துத் தருகிறேன்.''

''ஸாங்லீயில் ஒரு பார்ட்டி இருக்கிறது. வேண்டுமானால் சொல்லிப் பார்க்கிறேன். நீங்கள் இன்று பூராவும் ஹோட்ட லில்தானே இருப்பீர்கள்?''

''ஸாரி! என்னுடைய இரண்டு மகன்களும் சிங்கப்பூருக்குப் புதியவர்கள். ஊரைச் சுற்றிப் பார்க்க ஆசைப்படுகிறார்கள்.''

''இஸிட்? நேற்றைக்கு எங்கே போனீர்கள்?''

''சிட்டி டூர், டைகர் பாம்கார்டன்ஸ், ஜுரோங்பேர்ட் பார்க்.''

''இன்றைக்கு எங்கேயாவது போகப் போகிறீர்களா?''

''செண்டோஸா ஐலேண்ட்.''

''அற்புதமாக இருக்கும். போய் வாருங்கள். கேபிள் கார் ரைட், மானோ ரெய்ல் ரைட், அனுபவிக்க வேண்டியவை.



அதே மாதிரி ம்யூசிகல் பவுண்டன்ஸ் ஃபெர்ரிரைடும் பார்க்க வேண்டியவை.

''நான் நிறையத் தடவை பார்த்திருக்கிறேன்.'' மார்த் தாண்டம் பெருமை அடித்துக்கொள்ள, பிரணவ் கேட்டார்.

''செண்டோஸா ஐலேண்ட்க்கு எப்படிப் போகிறீர்கள்?''

''இங்கிருந்து கார்.''

''காருக்கு ஏற்பாடு செய்து விட்டீர்களா?''

''இனிமேல்தான் செய்ய வேண்டும்.''

''நீங்கள் விரும்பினால் என் காரை எடுத்துக் கொண்டு போகலாம். புதிய மாரீஸ்கார். இரண்டு மாதங்களுக்கு முன்பு தான் வாங்கினேன்.''

''நீங்கள் எங்கேயாவது செல்லக் கார் வேண்டாமா?''

''வேண்டாம். நான் ஹைரோடு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் இன்று பூராவும் இருக்க வேண்டிய கட்டாயம். பார்க்கிங் ஸ்கோயரில் வீணாய் நின்று கொண்டிருக்கும் காரை நீங்கள் எடுத்துச் செல்லலாமே?''

எக்கச்சக்கமாய் மலர்ந்தார் மார்த்தாண்டம். ''நன்றி பிரணவ். ஏதாவது சாப்பிடுகிறீர்களா?''

''ஒன்றும் வேண்டாம்.''

''ஏதாவது சாப்பிடுங்கள். வந்து நேரமாயிற்றே?''

''சரி, விஸ்கி லார்ஜ்.'' பிரணவ் நன்றாகச் சாய்ந்து கொள்ள, நாற்காலியினின்றும் முன்னுக்குச் சாய்ந்து மார்த்தாண்டம் இண்டர்காமின் ரிஸீவரை எடுத்தார். 'பார்' செக்ஷன் பட் டனைத் தட்டிவிட்டுச் சொன்னார்.

''ஃபோர்லார்ஜ் ஷிவாஸ் ரீகல் விஸ்கி. அலாங்வித் ஃபிங்கர் சிப்ஸ்'' அவர் பேசி முடிப்பதற்குள் பிரணவ் சிகரெட் ஒன்றைப்

பற்ற வைத்துக்கொண்டார். கன்னிப் புகையை உதடுகளில் கசிய வைத்துக் கொண்டே சொன்னார்:

"ஆச்சரியமாக இருக்கிறது."

"எது?"

"மகன்களோடு சேர்ந்து நீங்களும் மது அருந்துவது."

மார்த்தாண்டம் சிரித்தார். "இந்தியாவில்தான் அது பாவம். எனக்கு இந்தப் பத்தாம் பசலித்தனம் பிடிக்காது. எல்லா நாட்டுக்காரர்களும் மது அருந்துகிறார்கள். அது அவர்களின் பண்பாடு என்று ஒப்புக் கொள்கிறோம். ஆனால் இந்தியாவில் மட்டும் குடிப்பது பாவம் என்கிற மாயை தோன்றியிருக்கிறது. என்ன காரணம்? இந்தியன், 'குடும்பம்' - சீரழிந்து போகிற அளவுக்குக் குடிக்கிறான். அவன் மதுவை மருந்தாக நினைத்துச் சாப்பிட்டால் ஒன்றுமில்லை. போதைக்காகச் சாப்பிட்டால் ஆபத்து."

"வெல் செட்! ஆமாம்.... உங்கள் பிசினஸ் எப்படியிருக்கிறது?"

"போட்டிகள் அதிகம்."

புவனேஷ் குறுக்கிட்டுச் சொன்னான்.

"லாபம் குறைந்துவிட்டது."

"எந்தத் தொழிலுக்குமே போட்டி இருக்கும். எதிர்ப்புக்களை முறியடிப்பதுதான் வியாபாரத்தின் முக்கிய அம்சம்."

அறைக் கதவு தட்டப்பட்டது.

"கம் இன்."

வெள்ளுடுப்பில் சுத்தமான பேரர் தள்ளுவண்டியோடு உள்ளே வந்தார். தள்ளுவண்டியின் செல்ப்பில் செந்நிற திரவம் அசையும் பாட்டில்கள். புனல் வடிவ டம்ளர்கள். ஐஸ் க்யூப்ஸ் நிரம்பின பிளாஸ்க் சோடா பாட்டில்கள். பீங்கான்



தட்டுக்களில் ஃபிங்கர் சிப்ஸ். வாட்டர் ஜக். பேரர் டம்ளர்களில் ஊற்ற நான்கு பேரும் விஸ்கியைக் கொஞ்சங் கொஞ்சமாக வயிற்றுக்கு வார்க்க ஆயத்தப்பட்டார்கள்.

பிரணவ் கேட்டார்.

"மார்த்தாண்டம்! காட்ரோட்டில் கார் ஓட்டி உங்களுக்கு பழக்கமுண்டா?"

"பழக்கமுண்டு. ஏன் கேட்கிறீர்கள்?"

"செண்டோஸாவில் காட் ரோட்டுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். எல்லாமே ஹேர்பின் வளைவுகள். நூலிழை தவறினாலும் அதல பாதாளத்திற்குப் போய் விடுவீர்கள்."

மார்த்தாண்டம் சிரித்தார்.

"இந்தியாவில் பயங்கரமான காட் ரோடுகளில் காரை ஓட்டி ஓட்டி எனக்கு நிறைய அனுபவம் உள்ளது பிரணவ். பயப்படாதீர்கள்.... உங்கள் முழுக்காருக்கும் நான் உத்தரவாதம்."

பிரணவ் புன்னகைத்தார்.

"என் காரைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நீங்கள் விபத்தில் சிக்காமல் வரவேண்டும் என்பதுதான் என் கவலை."

சொல்லிக்கொண்டே கோட்பாக்கெட்டில் இருந்து கார் சாவியை எடுத்து, மார்த்தாண்டத்திடம் கொடுத்த பிரணவ், ரப்பர் தோட்டத்தைப் பற்றி மறுபடியும் பேசி விட்டு நகர்ந்தார்.

**கா**லை பதினோரு மணி.

மழை லேசாய்த் தூறிக்கொண்டிருக்க செண்டோஸா பாதையில் மாரீஸ் கார் வீறிட்டுக் கொண்டிருந்தது. மார்த்தாண்டம் காரை விரட்டினார். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் கான்க்ரீட் ரோடும், ரோடின் இரண்டு பக்கமும் அடர்த்தியாய் வளர்ந்திருந்த கோரைப் புற்களும் கண்ணுக்குச் சிக்கின. குளிர்காற்று ஊசிமுனைகளாய் மாறியிருந்தது.

புவனேஷ் கேட்டான்:

"செண்டோஸாவில் அப்படியென்ன அட்ராக்ஷன்?"

மார்த்தாண்டம் ஒரு வளைவில் திரும்பிக் கொண்டே சொன்னார். "பணத்தை எக்கச்சக்கமா வெச்சுக்கிட்டு என்ன பண்றதுன்னு தெரியாமல் முழிச்சிட்டிருக்கிற பணக்காரங்க எல்லோருமே செண்டோஸோவில் இருப்பாங்க. 'உர்ராங் உடான்' குரங்கு களோடு உட்கார்ந்து ப்ரேக் பாஸ்ட் சாப்பிடுவாங்க. லஞ்ச் சாப்பிடுவாங்க. கலைடாஸ் கோப்பிக் கலர்லே மியூஸிகல் பவுண்டனை வேடிக்கை பார்ப்பாங்க. மானோ ரயில்லே சுத்து வாங்க. வோர்ல்ட் ட்ரேட் சென்டர்க்குப் போய் திங்க்சை பர்சேஸ் பண்ணுவாங்க."

பேச்சு திசை திரும்பியது.

"பிரணவ் மனசு வைத்து இந்தப் புதுக்காரை இரவல் கொடுத்திருக்கிறார். இந்தியாவில் யாருக்கும் இந்தத் தாராள மனசு வராது."

"சிங்கப்பூர் ஜனங்களுக்குக் கார் ஒரு பொருட்டே கிடை யாது. தெரிந்த நண்பர்களுக்குக் காரைக் கொடுத்து உதவுவதை சந்தோஷமா நினைப்பாங்க."

திடீரென்று காரின் வேகம் குறைந்தது.

"ஏம்பா... ஸ்பீடைக் குறைச்சிட்டீங்க?"

கண்ணாடி வழியே கையைக் காட்டினார் மார்த்தாண்டம். புவனேஷும் யோகேஷும் குனிந்து கொண்டார்கள்.

**drive slowly.**

மார்த்தாண்டம் சொன்னார்: "பிரணவ் சொன்ன காட்ரோடு இனிமேத்தான் ஆரம்பம். ரெண்டாவது கிலோ மீட்டரிலிருந்து இயற்கைக் காட்சிகள் ஆரம்பமாயிடும். சிங்கப்பூரிலேயே அழகு கொட்டிக் கிடக்கிற இடங்கள் இனிமேல்தான் வரும். எங்கே பார்த்தாலும் கிராஸ் லேண்ட்ஸ்தான்."



கார் வளைவுகளில் ஏறியது.

மூன்றாவது வளைவைக் கடந்திருந்தபோது -

"பீங்க்...க்...க்..."

காருக்குப் பின்னால் நீளமான ஹார்ன் சத்தம் கேட்டது.

மார்த்தாண்டம் ரியர்வ்யூ கண்ணாடியில் பார்த்தார். ஒரு நீல நிறக் கார் தலைதெறிக்கிற வேகத்தில் வந்து கொண் டிருந்தது. மூர்க்கமான வேகம்.

"என்ன இவ்வளவு வேகமா வர்றான்?" எரிச்சலாய்த் திட்டிக் கொண்டே தன்னுடைய காரை ஓரம் கட்டினார் மார்த்தாண்டம். வேகத்தைக் குறைத்தபோது நொடிக்கும் குறைவான நேரத் தில் ஒரு தீற்றல் மாதிரி நீலநிறக் கார் விருட்டென்று அவர் களைக் கடந்து போயிற்று. யோகேஷ் குனிந்து பார்த்துச் சொன்னான். "அப்பா! ஒரு பொண்ணு காரை ஓட்டிக்கிட்டுப் போறா."

"ஒரு பொட்டச்சி இவ்வளவு வேகமாக கார் ஓட்டறாளா? சரியான தைரியம்தான்."

அந்த நீலநிறக் கார் விர்விர்ரென்று வளைவுகளில் ஏறிக் கொண்டு இருக்க, மார்த்தாண்டமும் காரின் வேகத்தை அதிகப் படுத்தினார்.

"அப்பா! நீங்க மெதுவாகவே போங்க" - புவனேஷ் கத்தி னான்.

"அவளை விடக்கூடாது! ஒரு தடவையாவது ஓவர்டேக் பண்ணிக்காட்டணும்." மார்த்தாண்டம் கியரை மாற்றி ஆக்ஸிலேட்டரை அழுத்தினார்.

காரின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்தது. அந்த நீலநிறக்கார் முன்புறக் கண்ணாடியில் நெருங்கி கொண்டே வந்தது.

"அப்பா வேண்டாம். ஹேர்பின் பெண்ட்ஸ் ரொம்பவும் மோசமா இருக்கு. தடுப்புச்சுவர் வேற சில இடங்களிலே காணோம்."

யோகேஷ் சொல்லிக்கொண்டிருக்கும் போதே -

"டொம்..." என்று ஏதோ சத்தம்.

மார்த்தாண்டம் நிமிர்ந்தார்.

கண்ணாடி வழியே அந்தக் காட்சி தெரிந்தது.

முன்னால் போய்க் கொண்டிருந்த அந்த நீல நிறக் கார் ரோட்டோரமாய் நின்றிருந்த ஒரு பாறையின் மேல் ஆக்ரோஷமாய் மோதி, பக்கவாட்டில் தேய்த்துக் கொண்டு போய் பக்கத்துப் பள்ளத்தில் யோசித்து யோசித்து உருண்டது. அந்தப் பெண்ணின் அலறல் தீனமாய் கேட்டது.

## 2

மார்த்தாண்டம் தன்னுடைய காரின் பிரேக்கைத் தன்னிச்சையாக அழுத்த - அது ரோட்டோரமாய்க் கிறீச்சிட்டு நின்றது.

புவனேஷும், யோகேஷும் காரின் கதவுகளை இரண்டு பக்கமும் 'விருட் விருட்'டென்று திறந்து கொண்டு கீழே இறங்கி விபத்து நடந்த இடத்தை நோக்கி ஓடினார்கள். மார்த்தாண்டமும் மகன்களைத் தொடர்ந்து ஓடினார்.

மூன்று பேரும் - மலைப்பாதையின் சுற்றுச் சுவருக்கு அருகே வந்து எட்டிப் பார்த்தார்கள்.



அந்த நீலக் கார் ஒரு மரத்தின் அடித்தண்டில் எசகு பிசகாய் மாட்டிக் கொண்டு - சிரசாசனம் செய்து கொண்டிருந்தது. அந்தப் பெண் ட்ரைவிங்சீட்டில் ரத்தமாய்த் துடித்துக் கொண்டிருந்தாள்.

யோகேஷ் சுற்றுச் சுவரின் மேல் தாவி ஏறினான்.

மார்த்தாண்டம் கத்தினார்.

"டேய் யோகேஷ்! என்னப் பண்ணப் போறே?"

"அந்தப் பெண்ணுக்கு உயிர் இருக்கு. காப்பாத்திடலாம்பா..."

"அந்தக் கார் அபாயகரமாத் தொங்கிட்டிருக்கு. நீ போய் அதைத் தொட்டதுமே மறுபடியும் உருள ஆரம்பிச்சிடும். அப்புறம் நீயும் சேர்ந்து அதள பாதாளத்துக்குப்போக வேண்டியதுதான்... இந்த வழியில வேற ஏதாவது கார் வரட்டும். போலீஸுக்குத் தகவல் சொல்லி அனுப்புவோம்..."

"போலீஸ் வந்து காப்பாத்தறவரைக்கும் அவ தாங்க மாட்டா போலிருக்கு... நாம்பளே முயற்சி செஞ்சாக் காப்பாத்திடலாம்பா..."

மார்த்தாண்டம் பதறினார். "வேண்டாண்டா. நான் சொல்றதைக் கேளு... மழை தூசி மண்ணெல்லாம் ஏராளமாயிருக்கு. கால் வெச்சா இழுத்துவிட்டுடும்..."

"அதோ, அந்தப் பக்கமா... சரிவா - படிக்கட்டு மாதிரிச் செதுக்கின வழி ஒண்ணு இருக்குப்பா. அது வழியாப் போனா.... காரை ஈஸியாத் தொட்டுடலாம். ட்ரைவிங் சீட் கதவும் நமக்குச் சாதகமாத் திறந்திருக்கு. அந்தப் பொண்ணோட கையைப் பிடிச்சு... இழுத்தா... அவ சுலபமா வந்துடுவா. நானும் புவனேஷும் கீழே இறங்கறோம். நீங்க இங்கேயே நின்னு ஏதாவது கார் வந்தா நிறுத்தி - போலீஸுக்குத் தகவல் கொடுக்கச் சொல்லுங்க. புவனேஷ்! வா... எம் பின்னாடியே நீயும் இறங்கு."

''ஷூ வழுக்கும் போலிருக்கே யோகேஷ்?''

''கழட்டி வெச்சுட்டு இறங்கு.''

புவனேஷ் ஷூக்களைக் கழற்றிச் சுவர்த் திட்டின் மேல் வைத்துவிட்டு - யோகேஷைப் பின் தொடர்ந்து இறங்கினான். அப்படியும் வழுக்கப் பார்த்தது.

மார்த்தாண்டம் கதறினார்.

''பார்த்துடா!''

யோகேஷ் தாழ்ந்த மரக்கிளைகளை லாவகமாய் பற்றி - மண்திட்டுக்களில் கால்களை மாறி மாறி வைத்து - சரசர வென்று கீழே இறங்க - புவனேஷும் பின்தொடர்ந்தான். காரைக் கொஞ்சங் கொஞ்சமாய் நெருங்க நெருங்க - அந்தப் பெண்ணின் முனகல் சத்தம் இப்போது தெளிவாய்க் கேட்டது.

''புவனேஷ் பார்த்து வா... இங்கே... கொஞ்சம் அதிகப் படியாய் - வழுக்கும்'' சொல்லிக்கொண்டே கீழே தாவிய யோகேஷ், சட்டென்று நின்றான். பின்னாலேயே வந்த புவ னேஷும் மூச்சு வாங்க நின்றான். மரக்கிளையில் சாய்ந்து கொண்டான்.

''ஏன் நின்னுட்டே?''

''அங்க... பாரு..''

புவனேஷ் பார்த்தான்.

பாறைத் திட்டின்மேல் உட்கார்ந்திருந்த சூட்கேஸ் ஒன்று வாயைப் பிளந்தபடி திறந்து கிடக்க உள்ளே நட்சத்திரப் பிரகாசமாய் சில வெளிச்சச் சிதறல்கள்.

''என்ன அது? அப்படி மின்னுது?''

''வா, பார்த்துடலாம்.''

இருவரும் சூட்கேஸை நோக்கித் தாவினார்கள். கால்களை விரித்து பாலன்ஸ் செய்து நின்றபடி - சூட்கேஸை நோக்கிக் குனிந்தார்கள். கிளறினார்கள்.



சூட்கேஸுக்குள் -

நீல வெல்வெட்டால் ஆன சிறிய பெட்டியொன்று - லேசாய்ப் பிளந்திருக்க - அதன் வயிறு முழுவதும் - பிரகாசமான வைரத் துணுக்குகள்.

யோகேஷும் புவனேஷும் பரஸ்பரம் ஒருத்தரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். இரண்டு பேர்களின் கண்களிலும் கணிசமான சந்தோஷம் பாய்ந்தது.

''யோகேஷ்! அத்தனையும் டைமண்ட்ஸ்.''

''மொதல்ல அள்ளு.''

சூட்கேஸை எடுத்தான் புவனேஷ்.

''சூட்கேஸை எடுக்காதே! அந்த வெல்வெட் பாக்ஸை மட்டும் எடுத்துக்கோ...''

''வேற ஏதாச்சும் இருக்குமான்னு கிளறிப் பார்த்துடட் டுமா?''

''ம்... பாரு...''

மார்த்தாண்டம் ரோட்டின் மேலிருந்து குரல் கொடுத்தார். ''டேய்! ரெண்டு பேரும் அங்க நின்னுக்கிட்டு - என்னடா பண்ணிட்டிருக்கீங்க?''

யோகேஷ் கத்தினான்.

''அப்பா! ஏதாவது கார் வந்தா நிறுத்தி - ஆக்ஸி டெண்ட்டைப் பத்தித் தகவல் சொல்லிடாதீங்க.''

''ஏண்டா?''

''ஒரு முக்கியமான சங்கதி. மேலே வந்து சொல்றோம். புவனேஷ்! இந்தப் பெட்டியை எடுத்துக்கிட்டு மேலே ஏறிப்போ. அதுக்குள்ளே நான் ஒரு சின்னக் காரியம் பண்ணிட்டு வந்துடறேன்...''

"என்ன பண்ணப் போறே?"

"சிரசாசனம் பண்ணிட்டிருக்கிற அந்த நீலக் காரை அதல பாதாளத்துக்கு அனுப்பிட்டு வந்துடறேன்."

"பார்த்து! ஜாக்கிரதை!"

"நீ என்னைப் பத்திக் கவலைப்படாமே... வைரங்கள் இருக்கிற இந்தப் பெட்டியை ஜாக்கிரதையாகக் கொண்டு போ. நீ வழுக்கி விழுந்து பெட்டி சிதறினா... ஒரு வைரத் துணுக்குக்கூட நம்ம கைக்குக் கிடைக்காது."

புவனேஷ் இடது கையில் வைரங்கள் இருந்த வெல்வெட் பெட்டியை எடுத்துக் கொண்டு மேலே ரோட்டை நோக்கிப் போக - யோகேஷ் - அந்த நீலக் காரை நோக்கிச் சரிவில் இறங்கினான். இறங்க... இறங்க...

அந்தப் பெண்ணின் தீனமான குரல் ஸ்பஷ்டமாய்க் கேட்டது.

"வா...ட்...டர்... வாட்...டர்..."

காரை நெருங்கிவிட்ட யோகேஷ், ஒரு மரக்கிளையைப் பற்றி ஊஞ்சலாடிக் கொண்டே - காருக்குள் எட்டிப் பார்த்தான். காரின் முன்பகுதி அப்பளமாய் நொறுங்கி - ட்ரைவிங் சீட்டில் அவளை - ரத்தமாய் நசுக்கியிருந்தது. கழுத்துக்குக் கீழே - சொதசொதவென்று புதுரத்தம். தலை ஒரு பக்கமாய்ச் சாய்ந்து - பாதி விழிகள் மயக்கத்தில் சொருகியிருந்தது. காய்ந்து போன உதடுகள் தன்னிச்சையாய் வார்த்தையை உதிர்த்துக் கொண்டிருந்தன. செல்லுலாயிட் பொம்மை மாதிரி அழகான முகம்.

"வா...ட்..டர்... வா...ட்...டர்..."

யோகேஷ் புன்னகையோடு பார்த்தான். "எப்படியும் சாகத்தான் போறே! நீ தண்ணி குடிச்சா என்ன? குடிக்காமல் போனா என்ன? நீ கொண்டுட்டு வந்த வைரங்களே உனக்கு எமனாயிடுச்சு. உன்னைக் காப்பாத்தத்தான் கீழே இறங்கினேன். ஆனா... ஸாரி... வெரி... வெரி... ஸாரி.."



சொல்லிக்கொண்டே காரை எட்டி உதைத்தான் யோகேஷ்.

அது சில கற்களைப் பெயர்த்துக் கொண்டு - பாலன்ஸ் தவறிக் குலுங்கியது. யோகேஷ் அடுத்த கிளைக்குத் தாவி ஊசலாடிக் கொண்டே - தன் சக்தி முழுவதையும் திரட்டி உதைத்தான்.

மரத்தின் அடித்தண்டு உபயத்தால் - ஒட்டிக் கொண்டிருந்த கார் குபீரென்று நிலை குலைந்து - பெயர்ந்து தன் உருளலைப் புதுப்பித்தது.

மரங்களுக்கு மத்தியில் - ஒளிந்திருந்த - பாறைத் திட்டுகளில் 'த்தத்ட்டார் த்தத்ட்டார்' என்று மோதிக் கொண்டு - வெகு வேகமாய்க் கீழே போனது.

யோகேஷ் புன்னகையோடு- திரும்பி மண் திட்டுக்களில் கால் பரவி ரோட்டுக்கு வந்தான். வேகமாய் மூச்சு வாங்கினான்.

மார்த்தாண்டம் பயத்தில் இருந்தார்.

"ஏண்டா... அந்தப் பொண்ணைக் காப்பத்தியிருக்கலாமே?"

"அவளைக் காப்பாத்தியிருந்தா... இந்த ஐஸ்வர்யம் நமக்குக் கிடைச்சிருக்காதுப்பா... வாங்க மொதல்ல காருக்குப் போவோம்..."

மூன்று பேரும் வேக வேகமாய்க் காரை நோக்கிப் போனார்கள்.

அதே விநாடி -

பாட்டுச் சத்தத்தோடு - ஒரு வேன் வேகமாய் வளைவில் ஏறிவந்தது. வேனின் உள்ளேயும் டாப் மேலேயும் இளைஞர்கள், யுவதிகள் மலாய் மொழியில் பாட்டைப் பாடிக் கைகளைக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

காரின் அருகே வந்ததும் வேன் நின்றது.

ட்ரைவர் அருகே உட்கார்ந்திருந்த இளைஞன் ஒருவன் வெளியே தலை நீட்டி வேகமாக ஆங்கிலத்தில் கேட்டான்.

"ஏன் காரை நிறுத்தியிருக்கிறீர்கள்? ஏதாவது உதவி தேவையா?"

மார்த்தாண்டம் பதில் சொல்லத் திணற - யோகேஷ் சிரித்துக்கொண்டே அந்த இளைஞனை ஏறிட்டான். "நன்றி! எந்த உதவியும் எங்களுக்கு வேண்டாம். எஞ்சின் சூடாகிவிட்டது. அதற்காகக் காரை நிறுத்தியிருக்கிறோம்."

"நீங்கள் இந்தியரா?"

"ஆமாம்."

"உங்கள் பிரதமரை எங்களுக்குப் பிடிக்கும்."

"நன்றி!"

வேனுக்குள்ளிருந்த எல்லாப் பெண்களும் இளைஞர்களும் கைகளை ஆட்ட, வேன் கிளம்பிப் போனது. மார்த்தாண்டம் காரின் ட்ரைவிங் சீட்டுக்கு வந்தார். யோகேஷும், புவனேஷும் பின் சீட்டுக்குப் போனார்கள்.

"அப்பா...." - யோகேஷ் கூப்பிட்டான்.

"ம்..."

"நாம இப்போ... ஹோட்டலுக்கே திரும்பிப் போறோம்."

"ஏன்? செண்டோஸா போக வேண்டாமா?"

"வேண்டாம். இந்த வைரங்களுக்கு உடனடியா ஒரு பாதுகாப்பைத் தரணும். நாம செண்டோஸா தீவை வலம் வர்றது அவ்வளவு உசிதமில்லை. காரைத் திருப்புங்க."

கொஞ்சம் தயக்கத்தோடு - மார்த்தாண்டம் காரைத் திருப்பினார். புவனேஷ் அவர் தோளைத் தொட்டான்.



"அப்பா! நீங்க ரொம்பவும் நெர்வஸா இருக்கீங்க. நீங்க பின்னாடி வாங்க. நான் காரை ட்ரைவ் பண்றேன்."

"வேண்டாம், ஐயாம் ஆல்ரைட். நானே ட்ரைவ் பண்றேன்." மார்த்தாண்டம் ஆக்ஸிலேட்டரை அழுத்தினார்.

கார் மலைப் பாதையில் வேகமாய் சறுக்கியது.

யோகேஷ் அந்த வெல்வெட் பெட்டியைத் திறந்து பார்த்தான். வைரங்கள் நூற்றுக் கணக்கில் கண்களைச் சிமிட்டின.

"அம்மாடி! என்னமா மின்னுது?"

"இது ஓர் எதிர்பாராத அதிர்ஷ்டம்."

"அந்தப் பெண்ணைப் பார்த்தா ஒரு பணக்கார வீட்டுப் பெண் மாதிரித் தெரியுது.. எதுக்காக அவ்வளவு வேகமாப் போனா?"

"இந்த வைரங்களுக்காக அவளை யாராவது துரத்தியிருக்கலாம்."

புவனேஷும் - யோகேஷும் மாறி மாறிப் பேசிக் கொண்டே வர - காரின் வேகத்தைச் சட்டென்று குறைத்தார் மார்த்தாண்டம்.

"ஏம்பா... என்னாச்சு?"

"எதிர்ல பார். சிங்கப்பூர் போலீஸ் பெட்ரோல் கார். வைரப் பெட்டியைச் சீட்டுக்கடியில் தள்ளு."

பதட்டமாய்த் தள்ளினான் யோகேஷ்.

சிங்கப்பூர் போலீஸ் கார் - தன் மண்டையில் சிவப்பு விளக்கைச் சுழற்றிக் கொண்டே வேகமாய் வர முன்னால் உட்கார்ந்திருந்த போலீஸ் அதிகாரி - வெளியே கையை நீட்டி மார்த்தாண்டத்தின் காரை நிறுத்தச் சொன்னார்.

கார் ரோட்டோரமாய் நிற்க -

அந்தக் கருநீலநிற யூனிஃபார்ம் அணிந்த - தக்காளி நிறப் போலீஸ் அதிகாரி காரை நோக்கி வந்தார். மார்த்தாண்டத்திடம் கேட்டார்.

"எங்கேயிருந்து வருகிறீர்கள்?"

"செ... சென்டோஸாவிலிருந்து..."

"எதிரே ஒரு நீலநிறக் காரைப் பார்த்தீர்களா?"

# 3

மார்த்தாண்டம் நெற்றியிலும் பின்னங்கழுத்திலும் கனிசமாய் வியர்த்துப் போய் யோகேஷைப் பார்க்க - யோகேஷ் இயல்பான குரலில் அந்தப் போலீஸ் அதிகாரியைக் கேட்டான். குரலில் பவ்யம் ஈஷிக் கொண்டது.

"நீலக் கார் என்றால் என்ன?"

"என்ன கார் என்பது தெரியவில்லை. ஆனால் அதை ஒரு பெண் ஓட்டிக்கொண்டு போனாள். கவனித்தீர்களா?"

"கவனிக்கவில்லை."

"உங்களைக் கடந்து எந்தக் காரும் போகவில்லையா?"

"எந்தக்காரும் போகவில்லை. ஒரேயொரு சுற்றுலா வேன் மட்டும் கல்லூரி மாணவ மாணவிகளோடு போயிற்று."

"நீங்கள் இந்தியாவா?"

"ஆமாம்."

"சிங்கப்பூர்க்கு என்ன காரியமாய் வந்திருக்கிறீர்கள்?"



"எங்களுக்கு இங்கே ரப்பர் தோட்டம் இருக்கிறது."

"சரி புறப்படுங்கள். உங்களை நிறுத்தி விசாரித்துத் தொல்லை கொடுத்ததற்காக மன்னிக்க வேண்டும்."

தொப்பியைச் சரிப்படுத்திக் கொண்டு நகர முயன்ற - போலீஸ் அதிகாரியை "எக்ஸ்க்யூஸ்மீ" என்று சொல்லி நிறுத்தினான் புவனேஷ்.

"எஸ்..." அவர் திரும்பினார்.

புவனேஷ் கேட்டான். "அந்த நீலக்காரை ஓட்டிச் சென்ற பெண் என்ன குற்றம் செய்தாள்?"

"மதிப்பு வாய்ந்த வைரங்களை ஒரு ஜுவல்லரி மார்ட்டிலிருந்து திருடிக் கொண்டு வந்துவிட்டாள். அவள் நீலக்காரில் ஏறித் தப்பிச் சென்றதாக ஸ்தல போலீஸாரின் கூற்று..." போலீஸ் அதிகாரி சொல்லிக் கொண்டு போக - மார்த்தாண்டம் முகத்தில் வழிந்த வியர்வையைக் கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டே, "நாங்கள் புறப்படலாமா?" என்று கேட்டார். போலீஸ் அதிகாரி தலையசைத்தார்.

"எஸ் ப்ளீஸ்."

அவர் அப்படிச் சொன்னதும் - மார்த்தாண்டம் காரை வேகமாய் நகர்த்தினார். சிறிது தூரம் போனதும் யோகேஷ் எரிச்சலாய் மார்த்தாண்டத்தைப் பார்த்தான்.

"ஏம்பா... இப்படி வேர்த்து வழியறீங்க. நீங்க போலீஸ் ஆபீஸரைப் பார்த்த பார்வையும் அவர்கிட்ட பேசின முறையும் சரியில்லை. சந்தேகம் வராதவங்களுக்குக்கூட உங்களைப் பார்த்தா சந்தேகம் வந்துடும்."

"எதிர்பாராதவிதமாக போலீஸ் வந்ததினாலே நான் கொஞ்சம் நெர்வஸ் ஆயிட்டேன். போலீஸ் அதிகாரிகளுக்கு சந்தேகம் வந்திருக்காதே...?"

''வந்திருக்க சான்சில்லை...! அப்புறம் புவனேஷ்... நீ அந்த நீலக் காரைப் பத்தி போலீஸ்கிட்டே ஃபர்தரா கேட்டிருக்கக் கூடாது...'' யோகேஷ் கடிந்து கொண்டான்.

புவனேஷ் புன்னகைத்தான். ''அப்படிக் கேட்டதினாலத் தான் ஓர் உண்மை தெரிஞ்சது.''

''உண்மையா? என்ன உண்மை?''

''அந்த வைரங்கள் மதிப்பு வாய்ந்த ஒண்ணுங்கிற உண்மை தெரிஞ்சது. கூடவே திருட்டு வைரங்கள்ங்கிற அடிஷனல் உண்மையும் தெரிஞ்சுருச்சு.''

மார்த்தாண்டம் பெருமூச்சு விட்டார். காரை ஒரு வளை வில் திருப்பினார்.

''நாம இனிமே தான் ஜாக்கிரதையா இருக்கணும்.''

''ஏம்ப்பா... இப்படிப் பயப்படறீங்க? அந்த நீலக் கார் ஆக்ஸிடெண்ட் ஆயிருக்குங்கிற உண்மையைக் கண்டுபிடிக் கவே ரெண்டு நாளாயிடும். அப்படியே கண்டு பிடிச்சாலும் ஆக்ஸிடெண்ட் நடந்த ஸ்பாட் ஒரு மலைச்சரிவு. கார் பீஸ் பீஸா சிதறியிருக்கும். அவ திருடிட்டு வந்த வைரங்கள் மலைச்சரிவு பூராவும் சிதறியிருக்கும்ங்கிற முடிவுக்குத்தான் போலீஸ் வருவாங்களே தவிர - நாம தான் அந்த வைரங்களை எடுத்துக்கிட்டோம்ங்கிற முடிவுக்கு எப்படி வருவாங்க? நாம எதுக்காக ஜாக்கிரதையா இருக்கணும்னு சொல்றீங்க?''

''சிங்கப்பூர் போலீஸ் கெட்டிக்காரங்க.''

''இருக்கட்டுமே...! நாமதான் வைரங்களை எடுத்துக்கிட்டு வந்தோம்ங்கிறதை எப்படி ஸ்மெல் பண்ணுவாங்க?''

''ஆக்ஸிடெண்ட் நடந்த ஸ்பாட்ல நம்ம கார் நின்னுட் டிருந்ததை அந்த டூரிஸ்ட் வேன் காலேஜ் பசங்க பார்த்திருக் காங்க.''

''சரி... அதனால?''



''திரும்பி வரும்போது - போலீஸ் ஆபீஸர் நம்ம காரை நிறுத்தி விசாரிச்சார்...''

''அது ஃபார்மல் என்கொய்ரி.''

''இப்போ அது நமக்கு ஃபார்மல் என்கொய்ரியா தெரிய லாம். ஆனா போலீஸ் ஆக்ஸிடெண்ட் நடந்த ஸ்பாட்டைக் கண்டுபிடிச்சுட்டா அதுவே ஒரு இம்பார்ட்டெண்ட் என்கொய் ரியா மாறிடும்.''

''என்னப்பா பயமுறுத்தறீங்க?''

''நான் பயமுறுத்தலை யோகேஷ். ஃபேக்ட்டை சொன்னேன்.''

''சரி இனிமே நாம என்ன பண்ணணும்? அதைச் சொல் லுங்கப்பா!''

''நாளைக்கே நாம மெட்ராஸ் புறப்பட்டுப் போயிடணும்.''

''நாளைக்கேவா?''

''ஆமா... இந்த வைரங்களை இங்கே வெச்சுட்டிருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் நமக்கு ஆபத்து.''

''சிங்கப்பூர் ஏர்போர்ட்ல கஸ்டம்ஸ் கெடுபிடிகள் எக்கச்சக்கம். இந்த வைரங்களை கஸ்டம்ஸோட பார்வையிலிருந்து நாம எப்படிக் காப்பாத்தி - கண்ணாமூச்சி காட்டி மெட்ராஸ் கொண்டு போகப்போறோம்?''

''அதுவும் கஷ்டம்தான்.''

சொல்லிக்கொண்டே காரை ரோட்டோரமாய் நிறுத்தினார் மார்த்தாண்டம். பின்னால் உட்கார்ந்திருந்த மகன்களைத் திரும்பிப் பார்த்தார். யோகேஷ் கேட்டான்.

''ஏம்பா காரை நிறுத்திட்டீங்க?''

''என்னமோ தெரியலை! மார்பு படபடன்னு அடிச்சிக்குது. மறுபடியும் வேர்த்துக் கொட்ட ஆரம்பிச்சுடுச்சு. ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தர் வந்து காரை ட்ரைவ் பண்ணுங்க.''

''நீங்க பின்னாடி சீட்டுக்கு வாங்கப்பா. நான் காரை ட்ரைவ் பண்றேன்.'' யோகேஷ் பின்பக்கக் கதவைத் திறந்து கொண்டு - ட்ரைவிங் சீட்டுக்குப் போனான். மார்த்தாண்டம் தொய்வாய்ப் பின் சீட்டுக்கு வந்தார்.

இரவு எட்டு மணி.

ஹோட்டலின் கண்ணாடி ஜன்னலுக்கு வெளியே 'சிங்கப்பூர்' ஈஸ்ட்மென் நிறச்சாயங்களில் முக்கி எடுத்த மாதிரி வர்ணக் கோலாகலமாய்த் தெரிய - நியான் லைட் அறிவிப்புகள் லட்சக் கணக்கில் கண்களை சிமிட்டிச் சிமிட்டி அணைத்து. நிமிஷத்துக்கொரு விமானம் வானத்தில் பறந்து - காற்று மண்டலத்தை அரைத்தது.

மார்த்தாண்டம், யோகேஷ், புவனேஷ் - டைனிங் டேபிளில் கட்லட்டை ஃபோர்க்குகளில் துண்டாடிக் கொண்டிருந்தார்கள். அறையின் மூலையில் டி.வி. திரையில் சர்க்கஸ் நிகழ்ச்சி யொன்று நடந்து கொண்டிருந்தது.

''மெட்ராஸ் ஃபிளைட் டிக்கெட் ஒரு வாரத்துக்கு ஃபுல்லாம், ட்ராவல் ஏஜெண்ட் சுத்தமா ரெண்டு கையையும் விரிச்சுட் டான்.'' யோகேஷ் கட்லெட்டை வாயில் திணித்துக் கொண்டே சொன்னான். புவனேஷ் அவனை ஏறிட்டான்.

''கமிஷன் அமௌண்ட்டை கொஞ்சம் ஏத்திப் பார்க்கிறது தானே?''

''ஃபிப்டி பர்செண்ட் தர்றதா சொல்லிப் பார்த்தும்... அவன் மசியலை.''

மார்த்தாண்டம் ரொட்டித் துண்டு ஒன்றுக்கு கத்தியினால் ஜாமைத் தேய்த்துக் கொண்டே யோகேஷை நோக்கி நிமிர்ந் தார்.

''நீயும்... சரி... புவனேஷும் சரி... ஒரு விஷயத்தைச் சுத்தமா மறந்துட்டு மெட்ராஸ் ஃபிளைட் டிக்கெட்டுக்காக அலையறீங்க.''



''என்னப்பா சொல்றீங்க?''

''கஸ்டம்ஸை எப்படிச் சமாளிக்கப் போறோம்?''

''ஏதாவது ஒண்ணுல பதுக்கிக் கொண்டு போயிட வேண் டியதுதான்.''

''எதுல பதுக்குவே?''

புவனேஷ் ஒரு யோசனை சொன்னான்.

''என்ன''

யோகேஷ் பேச வாயைத் திறந்தபோது -

அறைக்கதவுக்கு வெளியே - காலிங்பெல் கூப்பிட்டது. ''பர்ர்ர்ர்ர்'' மார்த்தாண்டம் எழுந்து போய்க் கதவைத் திறந்தார்.

பிரணவ் தலாலோ உள்ளே வந்தார். புன்னகைத்தார். ''சாப் பாட்டு நேரத்தில் உங்களுக்குத் தொந்தரவு தருகிறேன்.''

''தொந்தரவா... அதெல்லாம் ஒண்ணுமில்லை. ப்ளீஸ் கம்...'' நாற்காலியைக் காட்டினார் மார்த்தாண்டம். பிரணவ் உட்கார்ந்து கொண்டே கேட்டார்.

''செண்டோஸா போய் வந்தீங்களா? எப்படியிருந்தது?''

யோகேஷ் சொன்னான்.

''ஸாரி... அப்பாவுக்கு உடல் நலமில்லை. பாதி வழியி லேயே திரும்பி விட்டோம்.''

''அடடா... அப்பாவுக்கு என்ன உடம்பு?''

''அப்பாவுக்கு ரத்த அழுத்த நோய் இருக்கிறது. இன்றைக்குக் காரில் போகும்போது அது தலைகாட்டியது. ரொம்பவும் சிரமப்பட்டு விட்டார். எனவே திரும்பிவிட்டோம்.''

''ஹோட்டலில் டாக்டர் இருப்பாரே? காட்டினீர்களா?''

''வேண்டியதில்லை. அப்பாவிடம் மாத்திரைகள் இருக் கிறது.''

''கார் எந்தத் தொந்தரவும் கொடுக்கவில்லையே?''

''நோ நோ. எந்தத் தொந்தரவும் இல்லை. கார் அற்புதம். அதைவிட ரோடுகள் அற்புதம்! உங்களுக்கு ஏதாவது உணவு வகைகள் சொல்லட்டுமா?''

''வேண்டாம். ஒரு பார்ட்டியோடு இரவு உணவை முடித்துக் கொண்டுதான் வந்தேன். நான் வீடு திரும்பக் கார் வேண்டும். அதற்காகத்தான் வந்தேன்.''

அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே - சர்க்கஸ் நிகழ்ச்சி மறைந்து டி.வி. திரையில் அந்த அழகான சீனப்பெண் தோன்றினாள். மஞ்சள் கிழங்காய் முகம். 'பளிச்'சென்ற கண்களோடும், வரைந்த மாதிரியான உதடுகளோடும் சிநேக பாவத்தோடு புன்னகைத்து - அழகான ஆங்கிலத்தில் செய்திகளைச் சொல்ல ஆரம்பித்தாள்.

சிங்கப்பூர் பிரதமரின் வெளிநாட்டு விஜயத்தைப் பற்றியும் பாராளுமன்றத் தொடர் கூட்டங்களைப் பற்றியும் இரண்டு நிமிஷ நேரம் பேசியவள் அடுத்த விஷயத்தை ஆரம்பித்த போது மார்த்தாண்டமும் யோகேஷ் புவனேஷும் அதிர்ந்து போனார்கள்.

''மதிப்பு வாய்ந்த வைரங்களைத் திருடிச் சென்றதாக சொல்லப்படும் ஒரு பெண் - தன்னுடைய நீலக் காரில் தப்பிச் செல்ல முயன்றபோது அவளுடைய கார் விபத்துக்குள்ளாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கார் செண்டோஸா 'காட்' ரோட்டின் வளைவில் விபத்துக்குள்ளாகியிருக்கிறது. போலீஸார் ஸ்தலத்தை முற்றுகையிட்டபோது -

திரையில் அந்தப் பெண்ணின் உருவம் மறைந்து ஒரு மலைச் சரிவு தெரிந்தது. ரோட்டின் உச்சியில் போலீஸ் பெட்ரோல் கார் நின்றிருக்க - போலீஸ் யூனிஃபார்ம்கள் அசைந்தன. காமிராவின் கோணம் மாற - சிதறிய கார் பாகங்கள் மரக் கிளைகளில் தொங்கின. காமிரா நகர - போலீஸார் சரிவுகளில் டார்ச் லைட்களோடு அலைந்து கொண்டிருந்தார்கள். கூடவே போலீஸ் நாய்கள் குரைத்தன.



மார்த்தாண்டம் டி.வி.திரையிலிருந்து கண்களைப் பெயர்த்துத் தன் இரண்டு மகன்களையும் பார்த்தார். இரண்டு பேரின் முகங்களும் இருட்டுக்குப் போயிருந்தன. பார்வை மீண்டும் டி.வி.க்குப் போக திரையில் காமிரா நகர்ந்து சட்டென்று அந்தப் பெண்ணின் உடம்பு மேல் நிலைகொண்டு நின்றது. ரத்தக் கொசகொசப்பாய் உடம்பு சிதையாமல் இருந்த - முகம் பூராவும் ரத்தம் கோடு கோடாய் வழிந்திருக்க - அந்தப் பெண் திறந்த கண்களோடு செத்திருந்தாள். போலீஸ் அவளருகே மண்டியிட்டிருந்தார்கள்.

செய்தி வாசிக்கும் பெண்ணின் குரல் பின்னணியில் கேட்டது. ''இந்தப் பெண் யார் என்பதைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் போலீஸார் மும்முரமாய் ஈடுபட்டுள்ளனர். 'இவள் ஏதேனும் ஒரு கள்ளக்கடத்தல் கும்பலைச் சேர்ந்தவளாய் இருக்கலாம்' என்பது நகரப் போலீஸ் கமிஷனரின் கருத்து. காரினின்றும் சிதறிய சூட்கேஸைப் போலீஸார் கிளறிப் பார்த்தபோது - அதில் களவாடப்பட்ட வைரங்கள் இல்லை என்பது புலனாயிற்று. காலை நேரத்திலிருந்து மதியத்துக்குள் இந்த விபத்து நடந்திருக்க வேண்டுமென்றும், இந்த விபத்தைப் பார்த்தவர்கள் யாராவது இருந்திருக்க வேண்டுமென்றும் போலீஸார் கருதுகிறார்கள். விபத்து ஸ்தலத்தில் வைரங்கள் கிடைக்காத பட்சத்தில் - அந்த வைரங்கள் வேறு யாரிடமாவது கொடுத்து வைக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் - போலீஸ் கருத்து தெரிவித்துள்ளது. இதற்கிடையில் இது விபத்துதானா இல்லை மற்றவர்களால் செய்யப்பட்ட கொலை முயற்சியா? என்பதில் போலீஸாருக்குச் சந்தேகம் தோன்றியுள்ளது.''

செய்தி வாசிக்கும் பெண் சொல்லிக் கொண்டே போக,

மார்த்தாண்டம் -

யோகேஷ் -

புவனேஷ் -

மூன்று பேரின் இருதயங்களிலும் ரத்தம் பி.டி. உஷாவாய் மாறியது.

# 4

பிரணவ் தலாலோ டி.வி. நியூஸைக் கேட்டு விட்டு மார்த்தாண்டத்திடம் திரும்பினார். ''செண்டோஸா போகிற வழியில் தான் இந்த விபத்து நடந்திருக்கிறது மிஸ்டர் மார்த்தாண்டம்... நீங்கள் இந்த விபத்தைப் பார்த்தீர்களா?''

யோகேஷ் குறுக்கிட்டுச் சொன்னான்.

''பார்க்கவில்லை...''

''இந்த வழியைத்தானே நீங்கள் கடந்து வந்திருக்க வேண்டும்?''

''ஆமாம்... ஆனால் நாங்கள் கடந்தபின்தான் விபத்து நடந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.''

மார்த்தாண்டம் வியர்த்த முகத்தோடு பிரணவ்விடம் திரும்பினார். ''எனக்கொரு சந்தேகம் மிஸ்டர் பிரணவ்.''

''என்ன?''

''கார் விழுந்த இடத்தைப் பார்க்கும்போது அதல பாதாளமாய்த் தெரிகிறது. போலீஸார் இதை எப்படிக் கண்டுபிடிப்பார்கள்?''



''சுற்றுப்புறச் சுவர்களைப் பார்த்துக் கொண்டே போயிருப்பார்கள். புதிதாக ஏதேனும் ஒரு சுவர் உடைபட்டிருந்தால் அந்த இடத்துல இறங்கிப் பார்ப்பார்கள். சிங்கப்பூர் போலீஸ் மிகவும் திறமையான போலீஸ். சிங்கப்பூர் எல்லைக்குள் கார் திருட்டுப் போனால் - புகார் செய்த ஒரு மணி நேரத்திற்குள் கார் நம் வீட்டு வாசலில் நாய்க்குட்டி மாதிரிக் காத்து நிற்கும். எவ்வளவுதான் திறமையாகக் கொலை, கொள்ளைகளைச் செய்துவிட்டு ஒருவன் தப்பிவிட்டாலும் - கடைசியில் எப்படியும் அவன் சிங்கப்பூர் போலீஸாரிடம் மாட்டிக் கொள்ளத்தான் வேண்டும்.. மிஸ்டர் மார்த்தாண்டம் உங்களுக்கு ஏன் இப்படி வேர்க்கிறது?''

''என்னவோ தெரியவில்லை... சாப்பிட்ட லிக்கர் ஏதோ செய்கிறது. வாந்தி வருவதுபோல் தோன்றுகிறது.'' சொன்னவர் பாத்ரூமை நோக்கி வேகமாய் எழுந்து போனார்.

யோகேஷ் கேட்டான்.

''ஏம்பா... டாக்டரை வரவழைக்கட்டுமா?''

''வேண்டாம்.. வாந்தி பண்ணிட்டு வந்து கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்தாப் போதும்.'' சொல்லிக் கொண்டே பாத்ரூமுக்குள் நுழைந்துகொண்டார்.

பிரணவ் யோகேஷிடம் திரும்பினார்.

''உங்களுடைய அப்பாவை இனிமேல் குடிக்க அனுமதிக்காதீர்கள்.''

''சொன்னால்... அவர் கேட்கமாட்டார்.'' யோகேஷ் சொன்ன விநாடி அருகே டீபாயின் மேலிருந்த டெலிபோன் துடித்தது.

ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ.''

''.....''

''மிஸ்டர் பிரணவ் இங்கேதான் இருக்கிறார். அவரைப் பேசச் சொல்ல வேண்டுமா? ஒரு நிமிஷம் பொறுங்கள்.'' என்று சொன்ன யோகேஷ், ரிஸீவரை பிரணவ்விடம் நீட்டினான். ''போன் உங்களுக்குத்தான். யாரோ ஒரு பெண்.''

ரிஸீவரை வாங்கிச் செவிமடுத்த பிரணவ் மலாய் மொழியில் வேகமாய் பேசினார். அரை நிமிஷ நேரத்தில் பேச்சை முடித்துக் கொண்டு ரிஸீவரைச் சாத்தினார். புன்னகையோடு யோகேஷிடம் நிமிர்ந்தார்.

''டெலிபோனில் பேசியவள் என் மனைவிதான். இரவு எட்டு மணிக்கு மேல் இந்த ஹோட்டலில் இந்த எண் அறையில் இருப்பேன் என்று அவளிடம் சொல்லியிருந்தேன். வீட்டிற்கு விருந்தாளிகள் வந்திருக்கிறார்களாம். என்னை வரச் சொல்கிறாள். நான் கிளம்பட்டுமா...?

பிரணவ் எழுந்தார்.

புவனேஷ் குறுக்கிட்டுச் சொன்னான்.

''சாப்பிடாமல் போகிறீர்களே...?''

''சாப்பிட்ட வரைக்கும் போதும். என் வீட்டிற்கு வந்திருப்பவர்கள் அவளுடைய உறவினர்கள். நான் தாமதமாகப் போனால் வீட்டில் போரே உருவாகிவிடும்... அப்பாவிடம் சொல்லி விடுங்கள். நான் கிளம்புகிறேன்.''

பிரணவ் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினார். அவர் கிளம்பின பத்து நிமிஷத்துக்கெல்லாம் பாத்ரூமிலிருந்து வெளிப்பட்டார் மார்த்தாண்டம்.

வெகுவாய்ச் சோர்ந்து போயிருந்தார்.

''இப்ப எப்படியப்பா இருக்கு?'' - யோகேஷும் புவனேஷும் கேட்டுக் கொண்டே வந்து அவருடைய தோளைப் பற்றினார்கள்.



''பிரணவ் போயிட்டாரா?''

''போயிட்டார்.''

''ரூமோட கதவைத் தாழ் போட்டிருக்கியா?''

''போட்டிருக்கு.''

படுக்கைக்குப் போய்ச் சாய்ந்து கொண்டவர் மெல்லிய குரலில் சொன்னார். ''சிங்கப்பூர் போலீஸ் ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டைக் கண்டு பிடிச்சுட்டாங்க. நாம இனிமேத்தான் ஜாக்ரதையா இருக்கணும்.''

யோகேஷ் தலையில் அடித்துக் கொண்டான்.

''ஏம்பா... இப்படிப் பயப்படறீங்க? போலீஸ் ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டைத்தானே கண்டுபிடிச்சிருக்காங்க? நாம டயமண்ட்ஸை எடுத்ததைக் கண்டுபிடிக்க முடியாதே...?''

''அப்பாவுக்கு எவ்வளவு தைரியம் சொன்னாலும் இவர் இப்படி நடுங்கிட்டுத்தான் இருப்பார். ஒரு ஸ்லீப்பிங் டேப்ளட்டை எடுத்துக் குடு. சாப்பிட்டுத் தூங்கட்டும்.''

''அதெல்லாம் வேண்டாம்பா.'' மார்த்தாண்டம் மறுக்க - மறுக்க பிடிவாதமாய் மாத்திரையைக் கொண்டு வந்து கொடுத்தான் யோகேஷ்.

''அதை மொதல்ல விழுங்குங்கப்பா. அப்பத்தான் டென்ஷன் குறையும்.'' புவனேஷ் தண்ணீர் நிரம்பிய டம்ளரை நீட்டினான். மார்த்தாண்டம் வாங்கிக் கொண்டு மாத்திரையை உதட்டுக்குக் கொடுத்தார்.

டி.வி.யில் பதினோரு மணிவரைக்கும் ஒரு ஜப்பானியப் படத்தைப் பார்த்து கொண்டிருந்துவிட்டு அப்போதுதான் கண்ணயர்ந்தான் யோகேஷ். புத்தகம் படித்துக் கொண்டிருந்த புவனேஷ் - புத்தகம் மார்பின் மேல் கவிழ்ந்த நிலையிலேயே சன்னமான குறட்டையிலிருந்தான். மார்த்தாண்டம் ஒருக்களித்து ஒரு குழந்தை மாதிரி தூங்கிக் கொண்டிருந்தார்.

நிமிஷங்கள் சில கரைந்திருந்த போது -

அறைக்குள் அந்த விசித்திரச் சத்தம் கேட்டது யாரோ சுவாசிக்கத் திணறுகிற மாதிரியான சத்தம்.

யோகேஷ் விருட்டென்று எழுந்து உட்கார்ந்தான். 'கர்.. முர்.. ஹக்... ஹக்... கர்... முர்... ஹக்... ஹக்...'

சிரமமாய் மூச்சை இழுத்து விடுகிற சத்தம்.

யோகேஷ் பார்வையைச் சுழற்ற மார்பை வலக்கையில் பற்றிக்கொண்டு துடிக்கும் மார்த்தாண்டம் கண்ணுக்குச் சிக்கினார்.

''அப்பா...''

கட்டிலினின்றும் எழுந்து - சுவரிலிருந்த சுவிட்சைத் தேய்த்து விட்டு, கட்டிலை நோக்கி ஓடினான்.

புவனேஷும் விழித்து ''என்ன யோகேஷ்?'' என்று கேட்டபடி வந்தான். அறைக்குள் வெளிச்சம் நிரம்பியது. கட்டிலில் துடித்தபடி தெரியும் மார்த்தாண்டத்தைப் பார்த்ததும் பதட்டம் அவனையும் பற்றிக் கொண்டது.

''அப்பா...''

இருவரும் பக்கத்துக்கொருவராய் உட்கார்ந்தார்கள்.

''எ... என்னப்பா... ப... பண்ணுது?''

மார்த்தாண்டம் பேசமுடியாமல் திணறினார். ''அ...அ..அ...'' பேச்சுவராமல் வாய்க்குள்ளேயே நாக்கு சுழன்றது. முகம் ரத்தமாய்ச் சிவந்து போயிருந்தது.

''யோகேஷ் நீ... நீ... போய் டாக்டர்... கிடைப்பாரான்னு ரிஸப்ஷன்ல கேளு...'' புவனேஷ் சொல்ல யோகேஷ் இன்டர்காமின் ரிஸீவரை எடுத்தான். பட்டனைத் தட்டிவிட்டுக் கத்தினான். ''ஹலோ... ஹலோ...''



ரிஷப்னிலிருந்து ஒரு பெண்ணின் குரல் கேட்டது. தெளிவான ஆங்கில உச்சரிப்பு.

''என்ன வேண்டும் உங்களுக்கு?''

''ஒரு டாக்டர் கிடைப்பாரா...?''

''யாருக்கு... என்ன உடம்பு?''

''என்னுடைய அப்பாவுக்கு மார்புவலி. வலியால் சிரமப் படுகிறார். ஹோட்டலில் யாரேனும் டாக்டர்கள் தங்கியிருந்தால்.. அவர்களுக்குத் தகவல் கொடுத்து..''

''மன்னிக்க வேண்டும். ஹோட்டலில் இப்போது டாக்டர்கள் யாரும் தங்கியிருக்கவில்லை. டாக்டருக்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம். பேஷண்டுக்குப் பக்கத்தில் உங்களைத் தவிர வேறு யாராவது இருக்கிறார்களா?''

''இருக்கிறார்கள்.''

''நல்லது. அவர்களிடம் பேஷண்ட்டைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு - நீங்கள் ரிசப்ஷனுக்கு வாருங்கள்.''

யோகேஷ் புவனேஷிடம் விஷயத்தைச் சொல்லி விட்டு அறைக்கதவைத் திறந்துகொண்டு வராந்தாவில் ஓடி லிப்டுக்கு வந்தான். திறந்திருந்த லிப்ட் அவனை உள்ளுக்கு வாங்கிக் கொண்டதும் முப்பதே வினாடிகளில் அவனை ரிசப்ஷனுக்குக் கொண்டு வந்தது.

ரிசப்ஷனிஸ்ட் சொன்னாள். ''ஹோட்டல் கார், டாக்டரைக் கூட்டி வரப்போயிருக்கிறது. பேஷண்ட்டைப் பற்றின விவரங்களை இந்த பாரத்தில் தெளிவாய்க் குறிப்பிட்டுப் பூர்த்தி செய்து கொடுங்கள். வரும் டாக்டருக்கு இந்தக் குறிப்புகள் உதவியாக இருக்கும்.''

யோகேஷ் இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்த அந்தப் பாரத்தை வாங்கிப் பேனாவையும் அவளிடமிருந்து வாங்கிப் பூர்த்தி செய்ய ஆரம்பித்தான்.

ஓர் இரண்டு நிமிஷம் கரைந்திருக்கும்.

ஹோட்டலின் போர்டிகோ வாசலில் - கார் ஒன்றின் இரைச்சல் சத்தம் கேட்டது.

யோகேஷ் நிமிர்ந்தான்.

போலீஸ் பெட்ரோல் கார் - கொண்டையில் நீல விளக்குச் சுழல நின்றிருந்தது. அதன் வயிற்றிலிருந்து - உயரமாய் இரண்டு போலீஸ் சார்ஜெண்டுகள் கருநீல யூனிபார்மில் இறங்கினார்கள். நேர் பார்வை பார்த்துக் கொண்டு வேகமாய் நடந்து வந்தார்கள். எழுதுவதை நிறுத்திவிட்டு யோகேஷ் அவர்களையே பார்த்தான்.

இரண்டு சார்ஜெண்ட்களும் ரிசப்ஷனிஷ்டை நெருங்கினார்கள். அவள் லிப்ஸ்டிக் உதடுகளைக் குவித்து ''எஸ்!'' என்றாள்.

சார்ஜெண்ட்களில் ஒருவர் தன் கையிலிருந்த பழுப்புக் காகிதத்தை அவளிடம் நீட்ட - அவள் வாங்கிப் பார்த்துவிட்டு - மெல்லிய குரலில் கேட்டாள்.

''எல்லா அறைகளையும் சோதனை போடப்போகிறீர்களா?''

''ஆமாம்...''

''இந்த இரவு நேரத்தில் - ஹோட்டலில் தங்கியிருக்கும் வாடிக்கையாளர்களுக்கு மிகுந்த சிரமமாய் இருக்குமே...?''

சார்ஜெண்ட்களில் ஒருவர் சொன்னார்: ''சோதனைக்கு இரவு நேரம்தான் உகந்தது. சிங்கப்பூரில் இருக்கும் முக்கியமான அனைத்து ஹோட்டல்களிலும் இந்த நிமிஷம் சோதனை நடந்து கொண்டிருக்கிறது.''

''சோதனைக்குக் காரணம்?''

''முதலில் அந்நிய தேசத்து நபர்களின் அறை எண்களைக் கொடுங்கள்.''



''ஒரு நிமிஷம். அப்படி உட்காருங்கள். குறித்துத் தருகிறேன்.'' ரிசப்ஷனிஸ்ட் சொல்ல சார்ஜெண்ட்டுகள் அருகே இருந்த சோபாவில் உட்கார்ந்தார்கள்.

அதே விநாடி - இன்டர்காம் ''ஙீ... ஙீ... ஙீ...'' - என்றது.

ரிசப்ஷனிஸ்ட் எடுத்தாள்.

''எஸ்...!''

''.....''

''ஒன் செகண்ட்! பேசச் சொல்கிறேன்..'' சொன்னவள். ''மிஸ்டர் யோகேஷ்! உங்கள் சகோதரர் லைனில் காத்திருக்கிறார்...'' என்ற சொல்லி ரிஸீவரை அவனிடம் கொடுத்தாள்.

யோகேஷ் வாங்கி ''என்ன புவனேஷ்?'' என்றான்.

''அப்பா இறந்துட்டார்.''

## 5

**மா**ர்த்தாண்டம் மரணித்துப் போயிருக்க, யோகேஷும் புவனேஷும் திக்பிரமையடித்துப்போய்ப் பக்கத்திற்கொருவராய் நின்றிருந்தார்கள்.

''அப்பாவுக்கு இப்படியாகும்னு கொஞ்சம்கூட நினைச்சே பார்க்கலை யோகேஷ்! இப்ப என்ன பண்ணலாம்?''

யோகேஷ் மோவாயைத் தேய்த்துக்கொண்டிருந்தான். ''அப்பா செத்ததுகூடப் பெரிய விஷயமில்லை புவனேஷ். சிங்கப்பூர் போலீஸ் சார்ஜண்ட்ஸ் ஒவ்வொரு ரூமா நுழைஞ்சு

கிளறிப் பார்த்துட்டு வர்றாங்க. இந்த இக்கட்டான நிலைமையிலிருந்து நாம் எப்படி தப்பிக்கப் போறோம்?''

''அந்த வைரங்களை எடுத்து ஜன்னல் வழியே - வெளியே வீசிடுவோமா?''

''எனக்கு மனசு வரலை. அந்த வைரங்களோட மதிப்பு கோடிக் கணக்கான ரூபாய்! கூழாங்கற்களை மாதிரி வீசியெறிய எனக்குத் தைரியம் கிடையாது.''

''போலீஸ் வந்தா மாட்டிக்குவோமே?''

''மாட்டோம்.''

''எப்படிச் சொல்றே?''

''செத்துப்போன அப்பாதான் இந்த இக்கட்டிலிருந்து நம்மைக் காப்பாத்தப் போறார்.''

''எப்படி?''

''ரூமோட கதவை லாக் பண்ணியிருக்கியா?''

''ம்.''

''சரி... அந்த டயமண்ட்ஸை எடுத்துக்கிட்டு வா.''

புவனேஷ் தயக்கமாய் நடந்து போய் - சூட்கேஸைத் திறந்து - ஒரு சின்ன பாலிதீன் பையில் - பத்திரப்படுத்தியிருந்த வைரங்களைக் கொண்டு வந்தான். யோகேஷ் அதை வாங்கிக் கொண்டு மார்த்தாண்டத்தை நெருங்கினான். புவனேஷ் அவனைத் தொடர்ந்தான்.

''என்ன பண்ணப் போறே யோகேஷ்?''

''அப்பாவை.. இந்த வைரங்களுக்காக - ஸேப்டி லாக்கரா உபயோகப்படுத்திக்கப் போறோம்'' சொல்லிக் கொண்டே மார்த்தாண்டத்தின் தலைமாட்டில் வந்து நின்ற - யோகேஷ் - வாயை 0 வடிவமாய் பிளந்து உயிரை விட்டிருந்த அவரின் வாய்க்குள் - வைரங்கள் நிரம்பிய அந்தச் சிறிய பாலிதீன் பையை நுழைத்து ஆட்காட்டி விரலால் தள்ளினான்.



''யோகேஷ்'' புவனேஷின் குரல் நடுங்கியது.

''ஆபத்துக்குப் பாவமில்லை'' சிரித்தான்.

''செத்தவரைக் கேவலப்படுத்தற மாதிரி இல்லையா யோகேஷ்?''

''கேவலத்தையும் மதிப்பையும் பார்த்திட்டிருக்கிற நேரமா இது? போலீஸ் சார்ஜெண்ட்ஸ் ஒவ்வொரு ரூமா பார்த்துட்டு வர்றாங்க. அவங்க கையில இந்த வைரங்கள் சிக்கினா என்னாகும்னு யோசிச்சு பாரு... புவனேஷ்...''

புவனேஷ் தன் அப்பாவின் வாயைப் பார்த்தான். வைரங்கள் அடங்கிய அந்த பாலிதீன் பொட்டலம் வலுக்கட்டாயமாய்த் திணிக்கப்பட்ட மாதிரித் தெரிந்தது.

யோகேஷ் சொன்னான்.

''புவனேஷ்! ஒரு துண்டு வெள்ளைத் துணி கொண்டா...''

''எதுக்கு?''

''கொண்டு வா சொல்றேன்.''

புவனேஷ் சூட்கேஸைக் கிளறி - வெள்ளைத் துணியைக் கொண்டு வந்தான். யோகேஷ் அதை வாங்கி - மார்த்தாண்டத்தின் வாயைக் கட்டினான். இன்னும் கொஞ்சம் துணியைக் கிழித்து - இரண்டு கால்களின் பெருவிரல்களையும் சேர்த்துக் காட்டினான்.

''இப்போ... அப்பா வாய்க்குள்ளே வைரங்கள் பத்திரமாயிருச்சு.. போலீஸ் சார்ஜெண்டை சமாளிக்கிறதுதான் இனிப் பெரிய காரியம்.''

''யோகேஷ்! போலீஸை நம்மாலே சமாளிக்க முடியுமா?''

"சமாளிக்கலாம்... அப்பாவோட மரணம் நமக்கு இப்போ சாதகம். போலீஸோட கெடுபிடி அதிகமா இருக்காது. விசாரணையைச் சீக்கிரமாவே முடிச்சுக்கிட்டுப் போயிடுவாங்க."

இண்டர்காம் கிணுகிணுத்தது.

யோகேஷ் ரிஸீவரை எடுத்தான்.

'எஸ்."

ரிசப்ஷனிலிருந்து அந்தப் பெண் பேசினாள். "உங்கள் தந்தை மரணம் அடைந்து விட்டதாகச் சொன்னீர்கள். மேற்கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?"

"உடலை மெட்ராஸுக்குக் கொண்டு போக விரும்புகிறோம். அதற்கான விமான வசதி கிடைக்குமா?"

"அதற்கான ஏற்பாட்டை நீங்கள்தான் செய்து கொள்ள வேண்டும். நாங்கள் உங்களை கைய்ட் பண்ணுகிறோம்."

"நாங்கள் என்ன பண்ணவேண்டும்?"

"சாங்கி ஏர்போர்ட்டில் 'டைம்ஸ் எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிமிடெட்' என்று ஒரு நிறுவனம் இயங்குகிறது. அந்த நிறுவனத்தோடு நீங்கள் தொடர்பு கொள்ளுங்கள். விஷயத்தைக் கூறுங்கள். பணியின் சிரமத்திற்கு ஏற்றவகையில் கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு - உங்களுக்கு உதவி செய்வார்கள்."

"நள்ளிரவு சேவையும் உண்டா?"

"உண்டு.... நீங்கள் இப்போது சாங்கி ஏர்போர்ட் போக விரும்புகிறீர்களா?"

"ஆமாம்! என் தந்தையாரின் உடலை உடனடியாக அடுத்த விமானத்தில் மெட்ராஸ் கொண்டு போகவே விருப்பப்படுகிறோம்."

"சாங்கி ஏர்போர்ட் போக - ஹோட்டல் டாக்ஸியை ஏற்பாடு பண்ணட்டுமா?"



"ப்ளீஸ்."

"நீங்கள் ஐந்து நிமிடம் கழித்துக் கீழே வாருங்கள். டாக்ஸி தயாராகக் காத்திருக்கும்."

"நன்றி."

யோகேஷ் பேசிவிட்டு - ரிசீவரை வைத்த அதே விநாடி - அறையின் கதவு தட்டப்பட்டது.

"டொக்... டொக்..."

புவனேஷ் வேகமாய் போய்க் கதவைத் திறந்தான். போலீஸ் சார்ஜெண்ட்கள் நின்றிருந்தார்கள்.

சார்ஜெண்டில் ஒருவர் கையிலிருந்த பேப்பரைப் பார்த்துவிட்டு - "மிஸ்டர் மார்த்தாண்டம். மிஸ்டர் யோகேஷ். மிஸ்டர் புவனேஷ்... இந்த அறையில்தான் தங்கியிருக்கிறார்களா?"

"ஆமாம்."

"நீங்கள் இந்தியரா?"

"ஆமாம்."

"உங்கள் உடமைகளைச் சோதிக்க வேண்டும். சில வைரங்கள் திருட்டுப் போனது குறித்து - வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் மீது... சிங்கப்பூர் போலீஸுக்குச் சந்தேகம்... எனவே..." என்று சொல்லிக்கொண்டு போனவரின் பார்வை - கட்டிலில் படுத்திருந்த மார்த்தாண்டத்தின் மேல்பட - தன் நெற்றிப் பரப்பைச் சுருக்கினார் "என்னாயிற்று?"

யோகேஷ் சொன்னான். "ஒரு துக்க சம்பவம். என் தந்தை மார்த்தாண்டம் திடீரென்று மாரடைப்பில் இறந்து விட்டார். இந்தச் சம்பவம் ஐந்து நிமிஷங்களுக்கு முன்புதான் நடந்தது."

சார்ஜெண்ட் புவனேஷை ஏறிட்டார். "நீங்கள் இரண்டு பேரும் சகோதரர்களா?"

''ஆமாம்.''

''சிங்கப்பூர் வந்து எத்தனை நாட்களாயிற்று?''

''இரண்டு நாள்.''

''உங்கள் தந்தை இறந்ததற்காக நாங்கள் வருத்தப்படு கிறோம். இருந்தாலும் எங்களுக்கு இடப்பட்டுள்ள கடமையை நாங்கள் செய்தாக வேண்டும். உங்களுடைய உடைமை களை எடுத்துக்காட்ட முடியுமா?''

யோகேஷ் ஷெல்ப்பில் இருந்த சூட்கேஸைக் காட்ட - சார்ஜெண்ட்ஸ் அதை நோக்கி நடந்தார்கள்.

ஒரு பதினைந்து நிமிஷங்களை செலவழித்து - நிதான மாய்க் கிளம்பினார்கள். பின் சோர்வாய்த் திரும்பி யோகேஷைப் பார்த்தார்கள்.

''தொல்லை கொடுத்ததற்காக மன்னிக்க வேண்டும். உடலை இங்கேயே அடக்கம் பண்ணுகிறீர்களா? இல்லை இந்தியா கொண்டு போகிறீர்களா?''

''இந்தியாவுக்குக் கொண்டு போகப் போகிறோம்.''

''சாங்கி ஏர்போர்ட் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு - அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.''

சார்ஜெண்ட்ஸ் இயந்திரத்தனமாய்ச் சொல்லி விட்டு வெளி யேறினார்கள். அவர்கள் அந்த வராந்தாவைக் கடக்கும் வரை மௌனம் காத்த புவனேஷ் ஒரு நீளமான பெருமூச்சை வெளியேற்றி விட்டு - யோகேஷைப் பார்த்தான்.

''இந்தப் பதினைஞ்சு நிமிஷமும் வேர்த்து விறுவிறுத்துப் போயிட்டேன்.''

''எதுக்கும்... பயப்படாதே புவனேஷ். நீ ரூம்லேயே இரு. நான் சாங்கி ஏர்போர்ட் வரைக்கும் போய் - அப்பாவோட பாடியை ஃப்ளைட்ல கொண்டு போக ஏற்பாடு பண்ணிட்டு வந்துடறேன்...''



''இப்பவேவா?''

''ஆமா.. ஏதாவது ஒரு ஃப்ளைட்டைப் புடிச்சு... நாளைக்குச் சாயந்தரத்துக்குள்ளே நாம மெட்ராஸ் போயிடணும். வைரங் களைக் கொண்டு போறதுக்காக - அப்பாவோட மரணம் சரியான நேரத்துக்கு உதவியிருக்கு...''

''யோகேஷ்!''

''சொல்லு...''

''அப்பாவைவிட இந்த வைரங்களை நீ பெரிசா நினைக் கறியா?''

''உயிரோடு இருக்கும்போது... அப்பா... பெரிசு. அவர் செத்த பின்னே... அப்படியே நினைச்சுட்டிருக்க முடியுமா?'' - சொல்லிவிட்டு - அறையினின்றும் வெளியேறினான் யோகேஷ்.

லிப்ட்டில் பயணித்து - ரிசப்ஷன் கௌன்டருக்கு வந்தான். ரிசப்ஷனிஸ்ட் சொன்னாள். ''டாக்ஸி உங்களுக்காகக் காத்திருக் கிறது. நான் சொன்னது உங்களுக்கு நினைவிருக்கிறதா? சாங்கி ஏர்போர்ட்டில் டைம்ஸ் எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். அவர்கள் பாடியைக் கொண்டு போக ஏற்பாடு செய்வார்கள்.''

''நன்றி.''

போர்டிகோவில் காத்திருந்த டாக்ஸியை நோக்கிப் போனான் யோகேஷ்.

**சா**ங்கி ஏர்போர்ட்.

அந்த நடுநிசி நேரத்திலும் பரபரப்பாய் இருந்தது. நூறு ஹோட்டல்களை ஒரே இடத்தில் கட்டின மாதிரியான பிர மிப்பு. ஐம்பதுக்கும் மேற்பட்ட விமானங்கள் ராட்சஸ விமா னங்கள் ரன்வேயில் இளைப்பாறிக் கொண்டிருக்க -

லௌஞ்ச்சில் - ஏராள அந்நிய ஜனங்கள். டெலி கெய்ட் சார்ட்டரில் பயணிகள் தங்களுக்குத் தேவையான சங்கதிகளைத் தேடிக் கொண்டிருக்க டெலிஃபேக்ஸ் மெஷின்கள் - கண்ணாடிச் சுவர்களுக்குப் பின்னால் மௌனமாய் இயங்கிக் கொண்டிருந்தன.

சாங்கி ஷாப்பிங் காம்ப்ளக்ஸைத் தாண்டிக் கொண்டு - எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிமிடெட்டுக்குள் நுழைந்தான் யோகேஷ்.

வரிசை வரிசையாய்ச் சின்னச் சின்ன கௌன்ட்டர்கள். அவற்றுக்கு முன்னால் சொற்பமாய் ஜனங்கள். யோகேஷ் ஒரு காலியான கௌன்டர் முன்பாக வந்து நின்று உள்ளே எட்டிப் பார்த்தான்.

அந்த வழுக்கை ஆசாமி பார்த்துக் கொண்டிருந்த ஒரு புத்தகத்தை நகர்த்தி வைத்துவிட்டு - ''எஸ்...'' என்றார்.

யோகேஷ் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு விஷயத்தைச் சொன்னான். வழுக்கைத்தலை மோவாயைத் தேய்த்தது.

''உங்கள் தந்தை எப்போது இறந்தார்?''

''ஓர் அரைமணி நேரத்துக்கு முன்னால்...''

''இயற்கையான மரணம்தானா?''

''ஆமாம். மாரடைப்பு...''

''மாரடைப்பு என்று நீங்கள் சொல்கிறீர்கள். உடம்பைப் போஸ்ட்மார்ட்டத்துக்கு உட்படுத்தித்தான் ஃப்ளைட்டுக்கு கொண்டுவர முடியும்...''

யோகேஷ் திடுக்கிட்டான்.

''இயற்கையான மரணம்தான் என்று டாக்டரிடம் ரிப்போர்ட் வாங்கித் தருகிறோம். அவர் ஒரு இருதய நோயாளி.''

''இருக்கட்டும். மரணம் இயற்கையானதுதான் என்பதைப் போஸ்ட்மார்ட்டம் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பின்பே...



பாடியை ஃபிளைட்டுக்குக் கொண்டு வர முடியும். இந்த விதிகளுக்கு உட்பட்டுத்தான்... இறந்த உடல்கள் ஃபிளைட்டில் ஏற்றப்படுகின்றன.''

யோகேஷ் வியர்த்தான்.

## 6

**யோ**கேஷ் கௌன்ட்டர் ஆசாமியிடம் கேட்டான். ''நான் ஒரு டெலிபோன் செய்து கொள்ளலாமா?''

கௌன்ட்டர் ஆசாமி புன்னகைத்தான். சம்மதம் என்று அர்த்தம்.

நம்பர்களை சுழற்றினான். கடைசி எண்ணைச் சுழற்றி முடிந்ததுமே -

பளிச்சென்று இணைப்புக் கிடைத்தது. முதல் ரிங்கிலேயே ரிசப்ஷனிஸ்ட் பெண் ரிஸீவரை எடுத்து ''ஒபராய்... இம்பீரியல்...'' என்றாள்.

''நான் யோகேஷ் ஃப்ரம் இண்டியா.. பேசுகிறேன் அறை எண் 1401ல் .என் சகோதரன் இருப்பான். தயவு செய்து அவனை என்னோடு பேசச் சொல்கிறீர்களா?''

''ஒரு நிமிஷம்!''

ரிஸிவரைக் காதோடு பொருத்தியபடி - காத்திருந்தான் யோகேஷ். சாங்கி ஏர்போர்ட்டின் கண்ணாடிச் சுவருக்கு அப்பால் ரன்வே தெரிய -நான்கைந்து விமானங்கள் ஒரே நேரத்தில் - இடுப்பிலும் வால் பகுதியிலும் - ஈஸ்ட்மென் நிற

வெளிச்சங்களோடு - வானத்தில் எம்பிக்கொண்டிருந்தன. காதுகளை உறுத்தாத - ஆங்கில அறிவிப்புகள், கண்ணுக்குப் புலப்படாத ஸ்பீக்கர்களினின்றும் கசிந்து கொண்டிருந்தன.

சரியாய் நிமிஷ நேரத்திற்குப் பிறகு -

புவனேஷின் குரல் ரிஸீவரில் கேட்டது.

"என்ன யோகேஷ்?"

"அப்பாவோட பாடியை ஃபிளைட்டுக்குக் கொண்டு போறதில் ஒரு சிக்கல்."

"சிக்கலா - என்ன சிக்கல்...?"

"பாடியை போஸ்ட் மார்ட்டம் பண்ணணுமாம்."

"அப்பாவோட டெத் நேச்சுரல் டெத் தானே? போஸ்ட்மார்ட்டம் எதுக்கு? அப்பா ஹார்ட் அட்டாக்லதான் செத்தார்ன்னு சொன்னியா?"

"ம். சொன்னேன். ஃபிளைட்டுக்குள்ளே எந்த டெட்பாடி வந்தாலும் அது போஸ்ட் மார்ட்டத்துக்கு உட்பட்டிருக்கணும்ங்கிறது ஒரு விதியாம்..."

"சரி... இப்போ என்ன பண்ணலாம்?"

"எனக்கு ஒண்ணும் புரியலை."

"சரி... நீ ஓட்டலுக்கு வந்துடு. யோசிப்போம். விடியறதுக்குள்ளே நாம் ஏதாவது ஒரு முடிவுக்கு வந்தாகணும்."

யோகேஷ் ரிஸிவரை மாட்டி விட்டு ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்தான். அப்பா இறந்து போன துக்கத்தைக் காட்டிலும் - வைரங்களை எப்படி - இந்தியாவுக்குக் கொண்டு போகப் போகிறோம் என்பதில் - மனம் கவலையோடு கனத்தது.

பஸ்ஸரின் சத்தம் கேட்டு எழுந்து போய்க் கதவைத் திறந்தான் புவனேஷ். வெளியே யோகேஷ் சோர்வாய்த் தெரிந்தான். தலைமுடியை இரண்டு கைகளாலும் கோதிக் கொண்டே உள்ளே வந்தான். புவனேஷ் கதவைச் சாத்தித் தாழிட்டான்.



"போஸ்ட் மார்ட்டம் பண்ணாமே அப்பாவை ஃபிளைட்டுக்குக் கொண்டு போக முடியாது புவனேஷ்! பேசாம வைரங்களை வெளியே எடுத்துடறது நல்லது."

"வைரங்களை வெளியே எடுத்துட்டா... போஸ்ட் மார்ட்டம் முடிஞ்சபின்னாடி திரும்பவும் - அதை அப்பா உடம்புல மறைச்சு வெக்க முடியாதே?"

"அப்படீன்னா வைரங்களைக் கொண்ட போறதுக்கு வேற ஏற்பாடுதான் பண்ணணும்?"

"நாம கொண்டுபோற திங்க்ஸ்ல மறைச்சு வெச்சு."

"முட்டாள்தனமா உளறாதே... யோகேஷ். சிங்கப்பூர் கஸ்டம்ஸ் ரொம்பவும் கெடுபிடி. கண்ணையே ஸ்கேனராக்கிப் பார்ப்பாங்க."

இருவரும் - பேசிக் கொண்டிருக்கும்போதே -

அறை வாசலில் இருந்து பஸ்ஸர் சத்தம் எழுந்தது.

கொஞ்சம் பவ்யமாய் - யோகேஷும் புவனேஷும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"மறுபடியும் போலீஸா...?" - யோகேஷ் கேட்டான்.

"இருக்காது. அவங்க அப்பவே போயிட்டாங்களே..."

"போய்க் கதவைத் திறந்து பாரு."

புவனேஷ் போய்க் கதவைத் திறந்தான்.

வெளியே பிரணவ் தலாலோ நின்றிருந்தார். நீளமாய் நைட் கவுன் மாதிரி ஒரு ட்ரெஸ்ஸை மாட்டியிருந்தார். கண்களில் சின்னதாய் ஒரு கலக்கம்.

''வாங்க ஸார்...'' யோகேஷ் தலையசைக்க -

பிரணவ் உள்ளே வந்தார். கட்டிலில் மல்லாந்திருந்த மார்த் தாண்டத்தை நோக்கிப் போனார். அருகே போய் நின்று சில விநாடிகள் அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு - யோகேஷின் பக்கமாய் திரும்பினார்.

''அப்பா... எத்தனை மணிக்குக் காலமானார்...?''

நேரத்தை சொன்னான் யோகேஷ்.

''ஹார்ட் அட்டாக்...?''

''ஆமாம்.''

புவனேஷ் குறுக்கிட்டான்... ஆச்சரியக் குரலில்.

''அப்பா இறந்த செய்தியை உங்களுக்கு யார் ஸார் சொன்னார்கள்?''

''எனக்கு யாரும் சொல்லவில்லை. வீட்டிலிருந்து உங்களைப் பார்த்துப் பேசுவதற்காக... காரில் புறப்பட்டு ஹோட்டலுக்கு வந்தேன். இங்கு வந்த பின்னால் தான் எனக்கு விஷயம் தெரியும்! அதுவும் ரிசப்ஷனிஸ்ட் சொல்லி.''

யோகேஷும் புவனேஷும் தங்கள் நெற்றிகளைச் சுருக்கி னார்கள். ''எங்களைப் பார்ப்பதற்காக இந்த ராத்திரி நேரத்தில் எதற்காக வந்தீர்கள் ஸார்?''

''அப்படி உட்கார்ந்து பேசலாமா?''

''வாங்க ஸார்.''

குழப்ப முகங்களோடு - நாற்காலிக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள். பிரணவ் ஒரு நாற்காலிக்கு உடம்பைக் கொடுக்க - அவர்கள் எதிரில் உட்கார்ந்தார்கள்.

''என்ன விஷயம் ஸார்?''

யோகேஷ் மறுபடியும் கேட்க -



பிரணவ் புன்னகைத்தார்.

''நீங்கள் காலையில் செண்டோஸா ஏன் போகவில்லை...?''

''அப்பாவுக்கு உடம்பு சரியில்லை. எனவே திரும்பி விட்டோம்...''

பிரணவ் புன்னகைத்தார். ''காரணம் அதுவாக இருக்க முடியாது என்று நினைக்கிறேன்.''

''மிஸ்டர் பிரணவ், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?''

''செண்டோஸா மலைப்பாதையில் நடந்த கார் விபத் திற்கும், உங்களுக்கும் ஏதோ ஒரு வகையில் சம்பந்தம் இருக் கிறது.''

ஸ்பஷ்டமாய் புவனேஷும் யோகேஷும் திடுக்கிட்டார்கள்.

''ஸ... ஸார்.''

பிரணவ் தொடர்ந்தார். ''உங்களுக்கு அந்தப் பெண்ணைத் தெரியும்.''

''.....''

''வைரங்களை உங்களிடம் தான் அவள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.''

யோகேஷ் கொஞ்சம் கோபமாய் அவரை ஏறிட்டான். ''மிஸ்டர் பிரணவ்! இந்த நடுநிசியில் உங்களுக்கு என்னாயிற்று? ஏதாவது கனவு கண்டீர்களா? செண்டோஸா மலைப்பாதை யில் நடந்த விபத்திற்கும் எங்களுக்கும் எந்தவிதமான சம் பந்தமும் இல்லை. அந்தப் பெண் யாரென்றே எங்களுக்குத் தெரியாது.''

''பொய்...'' சொல்லிவிட்டு - பெரிதாய் - அகலமாய் பொருத்தி யிருக்கிற பல்செட் தெரிய - பிரணவ் சிரித்தார். ''யோகேஷ்! என்னிடம் பொய் சொல்லி நீங்கள் தப்பிக்க முடியாது. செண்டோஸா மலைப்பாதையில் என்ன நடந்தது என்பது

எனக்குத் தெரியாது. ஆனால் இந்த நிமிஷம் திருட்டுப் போன அந்த விலையுயர்ந்த வைரங்கள் உங்களிடம் தான் இருக்கின்றன என்பது இந்த உலகத்தின் மிகப் பெரிய உண்மை.''

புவனேஷ் குறுக்கிட்டான்.

''எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு சொல்கிறீர்கள்?''

''இந்த ஆதாரத்தை...'' - சொன்னவர் தன் இடது பைக்குள் கையை நுழைத்து - அந்தச் சிறிய காகிதப் பொட்டலத்தை எடுத்தார். புன்னகை செய்து கொண்டே பிரித்தார். ''பாருங்கள்!''

மடித்த காகிதம் பிரிபட்டதும் -

உள்ளே உட்கார்ந்திருந்த வைரம் - பளிச்சென்று போட்டோ ஃப்ளாஷாய் மின்னியது. யோகேஷும் புவனேஷும் அதிர்ச்சியால் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

பிரணவ் கேட்டார்.

''இந்த வைரத்தை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா யோகேஷ் அண்ட் புவனேஷ்?''

''இ... இ... இது...?'' யோகேஷ் குழறினான்.

''எப்படிக்கிடைத்தது என்று கேட்கிறாயா யோகேஷ்? சிம்பிள், மிகமிக சிம்பிள். நீங்கள் எடுத்துப் போன என் காரின் - பின் சீட்டில் கால் வைக்கும் இடத்தில் இந்த வைரம் எனக்குக் கிடைத்தது. அந்தப் பெண்ணிடமிருந்து நீங்கள் வாங்கிய வைரங்களில் ஒன்று எப்படியோ காருக்குள் தவறி விழுந்திருக்கும் என்பது என் யூகம். சரியா?''

''ஸ... ஸார்...''

''இனிமேலும் பொய் சொல்ல முயற்சிக்காதீர்கள். சிங்கப்பூர் போலீஸ் இந்த வைரங்களுக்காக முழு வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது.''



''ஸ... ஸார்...!''

''அந்த வைரங்களை எங்கே வைத்திருக்கிறீர்கள்?''

புவனேஷ் தமிழில் - ''யோகேஷ்! சொல்லிவிடு.'' - என்றான். யோகேஷ் இரண்டு கைகளிலும் முகத்தை ஒரு முறை வழித்து விட்டுக் கொண்டு நடந்ததைச் சொல்ல ஆரம்பித்தான்.

ஐந்து நிமிஷம் கண்களை மூடிக் கொண்டு யோகேஷ் சொன்னதைக் கேட்ட பிரணவ் பின் புன்னகையோடு கண்களை மலர்த்தினார். கேட்டார்.

''சொன்னது பூராவும் உண்மைதானே...?''

''உண்மை ஸார்.''

''நீலக் காரை ஓட்டி வந்த பெண்ணை நிஜமாகவே உங்களுக்குத் தெரியாது?''

''தெரியாது ஸார்.''

''மார்த்தாண்டம் இறந்தது ஹார்ட் அட்டாக்தானா? இல்லை வைரங்களைக் கடத்தறதுக்காக நீங்களே சாகடித்து விட்டீர்களா?''

''ஹார்ட் அட்டாக்தான் சார்!''

''சரி. மொத்தம் எத்தனை வைரங்கள்?''

''எண்ணவில்லை. சின்னச் சின்னதாய் நிறைய இருந்தன.

பிரணவ் மார்த்தாண்டத்தின் இறந்த உடலைப் பார்த்து விட்டு யோகேஷிடம் திரும்பினார். ''உங்களுக்கு இப்போது இருக்கிற ஒரேயொரு பிரச்சனை இந்த வைரங்களை மார்த்தாண்டத்தின் உடம்பில் வைத்து சிங்கப்பூர் கஸ்டம்ஸ் கண்களில் மண்ணைத் தூவிட்டு எப்படி மெட்ராஸுக்குக் கொண்டு போவது என்பதுதான் இல்லையா...?''

''ஆமாம் ஸார்.''

''மார்த்தாண்டத்தின் உடம்பை போஸ்ட் மார்ட்டம் செய்யாமல் மெட்ராஸ் கொண்டு போக நான் உதவி செய்கிறேன்.''

''நன்றி ஸார்!''

''நன்றிக்கு ஒரு ரேட் பேசிக் கொள்ளலாமா...?''

## 7

யோகேஷ், புவனேஷ் இருவருமே அதிர்ந்து போய் பிரணவ்வைப் பார்த்தார்கள். ''ஸார்... நீங்க என்ன சொல்றீங்க...?''

பிரணவ் புன்னகைத்தார். யோகேஷின் தோளைத் தட்டினார்.

''அண்ணன் தம்பி இரண்டு பேர்களுக்குமே நான் சொன்னது புரியவில்லை போலிருக்கிறது. உடைத்தே சொல்லிவிடுகிறேன். நான் செய்யப்போகும் உதவிக்கு இந்த வைரங்களில் பாதி எனக்கு வர வேண்டும்.''

சலனமில்லாத பார்வைகளோடு யோகேஷும் புவனேஷும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொள்ள பிரணவ் தொடர்ந்து பேசினார். ''நான் அந்த வைரங்களில் பாதியைக் கேட்பது அநியாயமாகப்படலாம். ஆனால் என்னுடைய உதவிக்கு நீங்கள் அந்த ஃபீஸைக் கொடுத்தே ஆக வேண்டும்.''

புவனேஷ் கேட்டான். ''அப்பாவின் உடலைப் போஸ்ட்மார்ட்டத்துக்கு உட்படாமல் ஃபிளைட்டுக்குக் கொண்டு போவது எப்படி ஸார்?''



மறுபடியும் பிரணவ் புன்னகைத்தார். ''மார்த்தாண்டம் போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட மாட்டார்... ஆனால் செய்த மாதிரி சர்டிபிகேட் கைக்கு வந்துவிடும்.''

''எப்படி...?'' இருவரும் புருவங்களை உயர்த்தினார்கள்.

''போஸ்ட்மார்ட்டம் செய்யப்படும் அரசு ஆஸ்பத்திரிகளில் எனக்குத் தெரிந்த டாக்டர்கள் இருக்கிறார்கள். சில நூறு டாலர்களுக்கு அவர்கள் நாம் விரும்பியபடி போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் எழுதித் தருவார்கள். அங்கே எல்லோரும் போய் இந்தக் காரியங்களைச் சாதித்துவிட முடியாது. இந்த மாதிரிக் காரியங்களுக்காக சில முறைகள் உள்ளன.''

யோகேஷ் வாயைத் திறந்தான். ''மிஸ்டர் பிரணவ், நீங்கள் கேட்டபடியே பாதி வைரங்களைத் தருகிறோம். போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை வாங்கிக் கொடுத்து விடுங்கள். அதுபோதும் எங்களுக்கு.''

''சரி, உங்களிடம் இப்போது எவ்வளவு டாலர் பணம் இருக்கிறது?''

''இரண்டாயிரம் டாலர்...''

''இந்த ஹோட்டலுக்கு ஏதாவது அட்வான்ஸ் கொடுத்திருக்கிறீர்களா?''

''ஆமாம். கொடுத்திருக்கிறோம்.''

''எனக்கு ஒரு ஐநூறு டாலரைக் கொடுங்கள். காலை ஆறு மணிக்குள் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை வாங்கிவிடலாம்.''

''மிஸ்டர் பிரணவ்! நிச்சயமாய்ப் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் நாம் விரும்பின மாதிரி கிடைக்குமா?''

''கவலையே வேண்டாம். டாக்டரோடு நான் இப்போதே உங்கள் முன்னாடியே தொடர்பு கொண்டு பேசுகிறேன்.

போதுமா?'' - சொன்னவர் டெலிபோனை நோக்கிப் போய் ரிஸீவரை எடுத்தார். ஏழெட்டு நெம்பர்களைச் சுழற்றிக் காத்திருந்தார்.

மறுமுனையில் ரிஸீவர் எடுக்கப்பட்டதும் பிரணவ் குரல் கொடுத்தார்.

''ஹலோ... டாக்டர் பிங்- யெங்.''

''......''

''ஆமாம். மிக முக்கியமான விஷயம்தான். என்னுடைய நண்பர் ஒருவர் - பெயர் மார்த்தாண்டம். இந்தியாவிலிருந்து இங்கே வந்தவர் திடீர் என்று ஹார்ட் அட்டாக்கில் போய் விட்டார். அவருடைய உடலை உடனடியாக மெட்ராஸ் கொண்டு போகவேண்டும். போஸ்ட்மார்ட்டம் பார்மாலிடீஸ் நடைபெற வேண்டும். போஸ்ட்மார்ட்டத்தில் உடல் சிதைக்கப் படக்கூடாது என்று - அவரோடு வந்த இரண்டு மகன்கள் விரும்புகிறார்கள்.''

''.........''

''நான் சொல்லியிருக்கிறேன்.''

''......''

''ஆமாம். ஹோட்டல் ஒபராயில் தங்கியிருக்கிறார்கள்.''

''.....''

பிரணவ் யோசித்துவிட்டு - ''அறை எண்... ஆயிரத்து நானூற்றி ஒன்று.'' என்றார்.

''.....''

''நன்றி டாக்டர்.'' - ரிஸீவரை வைத்துவிட்டு - பிரணவ் புன்னகையோடு யோகேஷையும் புவனேஷையும் ஏறிட்டார்.

''டாக்டர் 'நான் எல்லாவற்றையும் பார்த்துக்கிறேன்' என்று சொல்லிவிட்டார். நாளைக்காலை ஆறுமணிக்கு ஹாஸ்



பிடல் வேன் வரும். மார்த்தாண்டத்தோடு நாமும் அதே வேன்ல ஹாஸ்பிடலுக்குக் கிளம்புகிறோம். அரைமணி நேரம்தான். டெத் சர்டிபிகேட்டையும் - பி.எம். ரிப்போர்ட்டையும் வாங்கிக் கொண்டு - உடனே திரும்புகிறோம்.''

''ஸார்...''

''ம்...''

''வைரங்கள் பூராவும் இந்த நிமிஷம் அப்பாவின் வாயில் - மறைத்து வைத்திருக்கிறோம். ஹாஸ்பிடலுக்கு கொண்டு போவதற்குமுன் அவற்றை வெளியே எடுத்து விடலாமா?''

பிரணவ் கையசைத்தார். ''எடுத்தால் ஆபத்து யோகேஷ்...''

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''அவர் வாயிலிருந்து எடுத்தால் அந்த வைரங்களை எங்கே மறைத்து வைப்பீர்கள்?''

''ஹோட்டல் அறையில்... ஏதாவது ஓர் இடத்தில்..''

''சோதனைக்காக... சிங்கப்பூர் போலீஸ் மறுபடியும் வந்து விட்டால்?''

''மறுபடியும் வருவார்களா...என்ன?''

''சிங்கப்பூர் போலீஸ் நிரம்பவும் விழிப்பானவர்கள்... இந்த வைரக் கொள்ளையில் வெளிநாட்டவர்களுக்குப் பெரும் பங்கு இருக்கிறது என்பது போலீஸின் கணிப்பு. எந்த நிமிஷமும் அவர்கள் வரலாம். இந்த அறையையும் உங்கள் உடைமைகளையும் - சோதனை போடலாம்.''

புவனேஷ் யோசித்தபின் கேட்டான். ''வைரங்கள் அப்பாவின் வாயிலேயே இருக்கட்டும் என்று சொல்கிறீர்களா... மிஸ்டர் பிரணவ்?''

''ஆமாம்! நான் வீட்டிற்குப் போய்விட்டு நாளைக்காலை ஆறுமணிக்கு வருகிறேன். ஹாஸ்பிடல் வேன் சரியாக ஆறு மணிக்கு வந்து விடும்... தயாராக இருங்கள்...''

பிரணவ் புறப்படுவதற்கு ஆயத்தமானார்.

மறுநாள் காலை ஆறுமணி.

அறைக்கு வெளியே பஸ்ஸர் சத்தம் கேட்டு - அயர்ந்து போய்த் தூங்கிக் கொண்டிருந்த யோகேஷ் சட்டென்று கண் விழித்தான். பக்கத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த புவனேஷைத் தட்டி எழுப்பினான்.

''புவனேஷ்!''

பஸ்ஸர் மறுபடியும் ஒலித்தது.

யோகேஷ் எழுந்தான். கட்டிலில் விரைத்துப் போன உடம் போடு - நீட்டமாய்ப் படுத்துக்கிடந்த மார்த்தாண்டம் கண்ணில் பட - மனம் கனமாகி - வேக வேகமாய்ப் போய்க் கதவைத் திறந்தான். அறைக்கு வெளியே -

வெள்ளுடுப்பில் சீனத்தனமான முகங்களோடு - இரண்டு இளைஞர்கள் நின்றிருந்தார்கள். தலையில் குல்லாய்கள். ஒருவன் மோசமான ஆங்கிலத்தில் கேட்டான்.

''ஒன்மேன்... ப்ரம் இண்டியா... டெத் பை ஹார்ட் அட்டாக்?''

''எஸ்''

''ஹாஸ்பிடல் வேன் வெயிட்டிங்'' - கையிலிருந்த போல்டிங் ஸ்ட்ரெச்சரைக் காட்டினார்கள்.

யோகேஷ் வழிவிட உள்ளே போனார்கள். மார்த்தாண் டத்தின் அருகில் ஸ்ட்ரெச்சரை நீட்டி - தரையில் வைத்தார்கள். அவரைத் தூக்கி - அதில் கிடத்தினார்கள்.

புவனேஷ், யோகேஷை நெருங்கிக் கிசுகிசுப்பான குரலில் கேட்டான். ''இன்னும் பிரணவ் வரலையே...? நான் வேணு மானா போன் பண்ணிப் பார்க்கட்டுமா?''

''ம்... பண்ணு.''



புவனேஷ் டெலிபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்து - பிரணவ் வீட்டுக்கு டயல் செய்ய - அவருடைய மனைவி பேசினாள்.

''அவர் தூங்கிக் கொண்டிருக்கிறாரே!''

''தயவு செய்து எழுப்புங்கள். நான் அவரோடு பேச வேண்டும்.''

''ஒரு நிமிஷம் லைனில் இருங்கள்.''

காத்திருந்தான் புவனேஷ். மார்த்தாண்டத்தை ஆஸ்பத்திரி யின் ஆர்டர்லிகள் - ஸ்ட்ரெச்சரில் சிரமமாய்ச் சுமந்து கடந்து போனார்கள்.

பிரணவ் தூக்கக் கலக்கத்தில் கிடைத்தார்.

''யார்?''

''ஸார்.. நான் புவனேஷ்...''

''என்ன... ஹாஸ்பிடலிலிருந்து வேன் வந்து விட்டதா?''

''ஆமாம்... ஸார்...''

''சரி... நீங்கள் டெட்பாடியோடு ஹாஸ்பிடலில் இருங்கள். நான் காரில் அங்கே வந்து விடுகிறேன்.''

''சரி... ஸார்...''

ரிஸீவரை வைத்துவிட்டு - யோகேஷிடம் வந்தான் புவ னேஷ். யோகேஷ் கேட்டான். ''என்ன சொன்னார் பிரணவ்?''

''ஹாஸ்பிடலுக்கே வந்துடறதா சொன்னார்.''

''சரி... ரூமை லாக் பண்ணு. பாடியை கீழே கொண்டு போயிட்டாங்க.'' யோகேஷ் சொல்ல புவனேஷ் - நெம்பர் லாக்கை எடுத்து வந்து அறையைப் பூட்டினான்.

லிப்டில் இறங்கி - கீழ் தளத்துக்கு வந்தார்கள்.

சுத்தமான வெள்ளை நிற வேனின் - பின்புறக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருக்க - மார்த்தாண்டம் நீளமாய்க் கிடத்தப்பட்டிருந்தார். ஆர்டலிகளில் ஒருவன் கேட்டான்.

''ஷெல் வீ... கோ... ஸார்?''

தலையாட்டினார்கள்.

''கெட் இன்... ஃப்ரண்ட் சைட் டோர்'' யோகேஷும் புவனேஷும் வேனின் முன்புறக் கதவு வழியாக உள்ளே போனார்கள். வேன் புறப்பட்டது.

சிங்கப்பூரின் காலை நேரத் தெருக்கள் அதிசுத்தமாய் - வேனுக்கு இரண்டு பக்கமும் நழுவ - யோகேஷும் புவனேஷும் நேர்பார்வை பார்த்துக் கொண்டு வந்தார்கள். வேனில் ஸ்டீயரிங்கைப் பிடித்திருந்தவன் கேட்டான்.

''இவருக்கு மரணம் எப்படி ஏற்பட்டது?''

''மாரடைப்பு.''

''உடனே தகவல் தெரிவித்திருந்தால் ஹாஸ்பிடலுக்குக் கொண்டு வந்திருக்கலாமே! பார்மலினில் நனைத்திருக்கலாம். இப்போது பாருங்கள் உடம்பு விறைத்துப் போய்விட்டது.''

வேன் வேகம் பிடித்து 'ஷெண்டன்வே'யைத் தாண்டிக் கொண்டிருந்தது. ஆர்டர்லி தொடர்ந்து கேட்டான். ''மெட்ராஸுக்கு எப்போது புறப்படுகிறீர்கள்?''

''இன்றைக்கே...!''

''ஃபிளைட்டுக்கு ஏற்பாடு செய்து விட்டீர்களா?''

''டைம்ஸ் எக்ஸ்பிரஸ் பிரவேட் லிமிடெட்டை இது விஷயமாக ஏற்கெனவே தொடர்பு கொண்டு விட்டோம். அவர்கள் ஏற்பாடு செய்து தருவார்கள்.''

வேன் ஒரு பத்து நிமிஷம் ஓடி பச்சைப் பசேலென்று மரங்கள் சூழ்ந்த அந்த ஹாஸ்பிடலின் - பித்தளைக் கேட்டுக்குள்



நுழைந்தது. கான்க்ரீட் தரையில் நீளமாய் ஓடி முகப்பு வாசலில் போய் நின்றது.

வாசலில் -

பிரணவ் காத்திருந்தார். உடம்பில் கனமான கம்பளி கோட். முகத்தில் பதட்டமும் கவலையும் உட்கார்ந்திருந்தன. வேனிலிருந்து இறங்கிய யோகேஷையும் புவனேஷையும் அவரே அவசரமாய் எதிர் கொண்டார். சொன்னார்.

''டாக்டர் பிங்-யெங் இன்னும் வரவில்லை...''

''வந்துவிடுவாரில்லையா?''

''வரவேண்டும். வராவிட்டால் விவகாரம் சிக்கலாகி விடும்.''

''பிரணவ்... நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

''பிங் - யெங் தான் நமக்குச் சாதகமாக போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டும், டெத் சர்டிபிகேட்டும் கொடுப்பார்.''

''மற்ற டாக்டர்கள்...?''

''மார்த்தாண்டத்தை முறையாக போஸ்ட் மார்ட்டம் செய்துவிடுவார்கள்.''

''டாக்டர் பிங்-யெங் வருகிற வரைக்கும் பாடியை வைத்திருக்க முடியாதா?''


''ஆஸ்பத்திரி நிர்வாகம் அனுமதிக்காது. பாடியை மார்ச்சுவரி அறைக்குக் கொண்டு போவதற்குள் டாக்டர் பிங்-யெங் வரவேண்டும். இல்லாவிட்டால்.''

பிரணவ் பேச்சை முடிக்கவில்லை.

அந்தக் கார் ஹாஸ்பிடலின் போர்டிகோவை நோக்கி வேகமாய்ப் பீறிட்டு வந்தது. மூன்று பேரும் நிமிர்ந்தார்கள்.

சிங்கப்பூர் போலீஸ் பெட்ரோல் கார்.

# 8



போலீஸ் பெட்ரோல் காரைப் பார்த்ததும் பிரணவ், யோகேஷ், புவனேஷ் - மூன்று பேரும் வியர்க்க ஆரம்பித்தார்கள். போலீஸ் காரினின்றும் நட்சத்திரப் பட்டைகள் மின்ன அந்தப் போலீஸ் அதிகாரியும் சார்ஜெண்ட்டும் கீழே இறங்கினார்கள். இரண்டு பேருமே அபார உயரம். பார்வையில் மகாக்கூர்மை. அதிகாரி பிரணவ்வையே பார்த்தபடி நெருங்கினார். கேட்டார் கூழாங்கல் குரலில்.

''நீங்கள் மிஸ்டர் பிரணவ்?''

''ஆமாம்.''

''கார் பார்க்கிங்கில் நிறுத்தியிருக்கும் sek 5072 மாரீஸ் கார் உங்களுடையதுதானே?''

''ஆமாம்.''

''நேற்றைக்கு நீங்கள் செண்டோஸா போனீர்களா?''

''நா... நான் போகவில்லை. என் காரை இந்த இந்திய நண்பர்களுக்குக் கொடுத்திருந்தேன். அவர்கள்தான் போய்விட்டு வந்தார்கள்.''

போலீஸ் அதிகாரி யோகேஷிடம் திரும்பினார். ''நீங்கள்தான் செண்டோஸா போனீர்களா?''

''ஆமாம்! ஆனால்... நாங்கள் செண்டோஸா போகவில்லை. பாதி வழியிலேயே திரும்பிவிட்டோம்.''



''ஏன்?''

''எங்கள் தந்தைக்கு உடல் நலம் சரியில்லை.''

''இறந்தவர் அவர்தானா?''

''ஆமாம்....''

''செண்டோஸாவுக்கு போனவர்கள் பாதி வழியிலேயே திரும்பிவிட்டதாகச் சொன்னீர்கள். பாதிவழி என்றால் எந்த இடத்திலிருந்து என்று சொல்ல முடியுமா?''

''எனக்கு சரியாய் சொல்லத் தெரியவில்லை. நானும் என்னுடைய சகோதரனும் சிங்கப்பூருக்குப் புதியவர்கள்.''

போலீஸ் அதிகாரி புன்னகைத்தார். ''நான் இடத்தை சொல்கிறேன், சரியா என்று பாருங்கள். செண்டோஸா போகும் காட்ரோட்டின் ஓர் ஓரத்தில் காரை நிறுத்தியிருந்தீர்கள். அப்போது கல்லூரி மாணவ மாணவிகளோடு ஒரு வேன் வந்தது. அவர்கள் வேனை நிறுத்தி ''ஏதாவது உதவி வேண்டுமா?'' என்று உங்களைக் கேட்டார்கள். நீங்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டுக் காரைத் திருப்பிக் கொண்டு வந்தீர்கள்.''

போலீஸ் அதிகாரி சொல்லச் சொல்ல -

யோகேஷின் இருதயம் வேகமான துடிப்பில் இருந்தது. அவர் தொடர்ந்து அழகான ஆங்கிலத்தில் சின்னச் சின்ன வாக்கியங்களாய் சொல்லிக் கொண்டே வந்தார். ''காரை திருப்பிக் கொண்டு வரும்போது எதிரே சிங்கப்பூர் போலீஸ் கார் வந்தது. போலீஸ் அதிகாரி உங்கள் காரை நிறுத்தினார். 'எதிரே வேகமாய் போன நீலக்கார் ஒன்றைப் பார்த்தீர்களா?' என்று கேட்டார். நீங்கள் இல்லை என்று சொன்னீர்கள், சரியா...?''

யோகேஷ் பயமாய் தலையாட்டினான். ''நீங்கள் சொன்ன அந்த இடத்திலிருந்துதான் காரைத் திருப்பிக் கொண்டு வந்தோம்.''

''நீங்கள் மிஸ்டர் யோகேஷ்?''

''ஆமாம்.''

''மிஸ்டர் யோகேஷ்! உங்களிடமிருந்து எங்களுக்குச் சில உண்மையான தகவல்கள் வேண்டும்.''

''கே... கேளுங்கள் ஸ... ஸார்.''

''நீங்கள் அந்த நீலக்காரைப் பார்க்கவேயில்லையா?''

''இல்லை.''

''மிகமிக வேகமாகச் சென்ற காரை நீங்கள் பார்க்காமல் இருந்தது ஆச்சரியம்தான். சரி அடுத்த கேள்விக்கு வருகிறேன். நேற்றையை இரவு எட்டு மணிக்கு டி.வி. பார்த்தீர்களா?''

''பார்க்கவில்லை.''

''அந்த நீலக்கார் செண்டோஸா காட் ரோட்டில் விபத்துக்குள்ளாகியதைக் காட்டினார்கள். அது விபத்துக்குள்ளான இடம் எது என்று சொன்னால் நீங்கள் இன்னமும் ஆச்சரியப்படுவீர்கள். காட்ரோட்டில் எங்கே உங்கள் காரை நிறுத்தியிருந்தீர்களோ... அந்த இடத்தில் தான் விபத்து நடந்திருக்கிறது. விபத்து நடந்தபோது காலை 11 மணி 34 நிமிடம்.

யோகேஷ் பதில் பேசமுடியாமல் எச்சில் விழுங்க - அதிகாரி தொடர்ந்து சொன்னார். ''விபத்து நடந்த நேரத்தை எங்களால் எப்படி அவ்வளவு துல்லியமாகச் சொல்ல முடிகிறது என்று யோசிக்கிறீர்களா யோகேஷ்? அது நிரம்பவும் சுலபம். விபத்துக்குள்ளான காரின் இடிபாடுகளை தேடிக் கண்டுபிடித்த போது - அந்தக் காரில் பொருத்தப்பட்டிருந்த ஒரு நொறுங்கிய - எலக்ட்ரானிக் கடிகாரம் 11.34-இல் நின்றுபோயிருந்தது.''

பிரணவ் குறுக்கிட்டார். ''இவர்களிடமிருந்து நீங்கள் என்ன உண்மையை எதிர்பார்க்கிறீர்கள் ஸார்...?''



''விபத்துக்குள்ளான அந்த நீலக்காரை இவர்கள் பார்த்திருக்கிறார்கள். என்ன காரணத்தினாலோ அதை மறைக்கிறார்கள்.''

''இவர்கள் விபத்து நடந்த ஸ்தலத்தில் இருந்தார்கள் என்பதற்கு என்ன அத்தாட்சி?'' பிரணவ் கேட்க அதிகாரி புன்னகைத்தார்.

''செண்டோஸாவில் நேற்றுக் கூட்டம் குறைவு. காட் ரோடு வழியாக வந்த எல்லா வாகனங்களையும் செண்டோஸாவில் விசாரித்தோம். வேனில் வந்த கல்லூரி மாணவ மாணவிகள் இந்த இந்திய நண்பர்கள் ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டில் இருந்ததாகச் சொன்னார்கள். நீலக்காரைப் பின்தொடர்ந்து போன போலீஸ் அதிகாரியும் இவர்களுடைய காரை மடக்கி விசாரித்திருக்கிறார். உங்கள் கார் நெம்பரையும் கவனித்துக் குறித்து வைத்துக் கொண்டார். ஒரு மணி நேரத்துக்கு முன்னால் போலீஸ் ஹெட்குவார்ட்டர்ஸில் அவரை நான் சந்தித்த போது கார் நெம்பரைக் கொடுத்தார். ட்ராபிக் சார்ட்டில் கார் ரெஜிஸ்ட்ரேஷன் நெம்பரை வைத்து உங்கள் அட்ரஸைக் கண்டுபிடித்து வீட்டுக்குப் போனோம். உங்கள் மனைவி இருந்தார்கள். நீங்கள் இங்கு இருக்கும் விபரத்தைச் சொன்னார்கள். உடனே வந்தோம்.''

பிரணவ் குறுக்கிட்டுச் சொன்னார். ''அந்த நீலக்கார் விபத்துக்குள்ளானதை இவர்கள் பார்த்திருந்தால் நிச்சயமாக என்னிடம் சொல்லியிருப்பார்கள். ஒரு கார் விபத்துக்குள்ளானதை மறைக்கவேண்டிய அவசியமும் இவர்களுக்கு இல்லை. நேற்றுக் காலை என்னுடைய காரில் செண்டோஸா போகும் போதே - மார்த்தாண்டம் சுகவீனமாகத்தான் இருந்தார். தந்தையின் உடலை இந்தியாவுக்குக் கொண்டுபோக வேண்டிய - ஒரு துக்ககரமான நிலையில் இருக்கும்போது அவர்களை நீங்கள் விசாரணை என்னும் பெயரில் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருப்பது சரியில்லை.''

போலீஸ் அதிகாரி புன்னகைத்தார். ''ஒரு பெரிய வைரக் கொள்ளை நடந்திருக்கிற இந்த நேரத்தில் நாங்கள் மேற் கொள்ளும் நடவடிக்கைகள் இவை. இந்த விசாரணை உங் களுக்கு மட்டும்தான் என்று எண்ணிவிடாதீர்கள். செண்டோஸா ரோட்டில் நேற்றைக்குச் சென்ற எல்லா வாகனங்களின் உரிமையாளர்களிடமும் விசாரணை நடந்து கொண்டிருக் கிறது. விபத்து நடந்த ஸ்தலத்தில் காணாமல் போன வைரங்கள் அந்த வழியாகப் போன யாராலோ எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் யார் என்பதை மோப்பம் பிடிக்கத்தான் சிங்கப்பூர் போலீஸ் மும்முரமாய் இயங்கிக் கொண்டிருக்கிறது.''

யோகேஷ் தீர்மானமான குரலில் சொன்னான்.

''நாங்கள் அந்த நீலக்காரைப் பார்க்கவேயில்லை. எங் களை நம்புங்கள் ஸார். எங்கள் தந்தை இறந்த துக்கத்தில் நாங்கள் இருப்பதால் மிகவும் குழம்பியிருக்கிறோம்.''

''பாடியை எடுத்துக் கொண்டு எப்போது கிளம்பு கிறீர்கள்?''

''டெத் சர்டிபிகேட்டும் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் டும் கிடைத்ததும் புறப்பட்டு விடுவோம். ஃபிளைட்டுக்கு டைம்ஸ் எக்ஸ்பிரஸ் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.''

''உங்கள் தந்தையை நாங்கள் பார்க்கவேண்டும்.''

யோகேஷும், புவனேஷும் பிரணவைப் பார்த்தார்கள். பிரணவ் தோள்களைக் குலுக்கினார். ''தாராளமாக நீங்கள் பார்க்கலாம். வாருங்கள்.''

டாக்டரின் அனுமதி பெற்று மார்ச்சுவரிக்குள் நுழைந் தார்கள். போஸ்ட் மார்ட்டத்திற்குத் தயாராக இருந்த மார்த் தாண்டம் மல்லாந்திருந்தார்.

போலீஸ் அதிகாரி கேட்டார்.



''துணியால் வாயை எதற்காகக் கட்டியிருக்கிறீர்கள்?''

''எங்களுடைய மதக் கோட்பாட்டின்படி ஒருவர் இறந்த துமே அவருடைய வாயைக் கட்டிவிட வேண்டும். அதே போல் இரண்டு கால் பெருவிரல்களையும் சேர்த்துக் கட்டிவிட வேண்டும்.''

''போஸ்ட் மார்ட்டம் முடிந்ததும் ரிப்போர்ட்டின் காப்பி ஒன்று எங்களுக்கு வேண்டும்.''

''தருகிறோம்.''

''அதே போல் சிங்கப்பூரைவிட்டு இந்தியாவுக்கு நீங்கள் புறப்படும் முன்பு போலீஸிடம் அனுமதி பெற வேண்டும். உங் கள் உடைமைகளைச் சோதித்துப் பார்த்த பிறகே ஏர்போர்ட் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.''

''உங்களிடம் அனுமதி பெற்றுக் கொண்டே போகிறோம்.''

போலீஸ் அதிகாரியும் சார்ஜெண்ட்டும் மறுபடியும் ஒரு தடவை மார்த்தாண்டத்தை பார்வையால் நனைத்துவிட்டு வெளியே வந்தார்கள். ஹாஸ்பிடல் போர்டிகோவில் நின்றிருந்த போலீஸ் காருக்குள் நுழைந்ததும் அது புறப்பட்டது.

காம்பௌண்ட் கேட்டைத் தாண்டும்வரை பார்த்துக் கொண்டிருந்த மூன்று பேரும் தத்தம் மார்பின் மேல் கையை வைத்துப் பெருமூச்சு விட்டார்கள்.

''கண்டத்திலிருந்து தப்பிவிட்டோம்'' என்றான் புவனேஷ்.

''இன்னொரு கண்டம் இருக்கிறது புவனேஷ். டாக்டர் பிங்-யெங் இன்னமும் வரவில்லை. வேறு எந்த டாக்டராவது போஸ்ட் மார்ட்டத்தை ஆரம்பிக்கிறேன் என்று சொன்னால் நம்மால் மறுக்க முடியாது.''

''என்ன செய்யலாம்?''

யோகேஷ் கவலையாய்க் கேட்ட விநாடி -

ஹாஸ்பிடல் டெலிபோன் ஆப்ரேட்டர் பெண் குரல் கொடுத்தாள். "மிஸ்டர் பிரணவ்! உங்களுக்கு டெலிபோன். டாக்டர் பிங்-யெங் பேசுகிறார்.

பிரணவ் ஓடிப்போய் ரிஸீவரை வாங்கினார்.

"ஹலோ."

"பிரணவ்! நீங்கள்தானே?"

"ஆமாம்."

"நான் ஹாஸ்பிடலுக்கு வர முடியாத சூழ்நிலை."

"கா... காரணம்?"

"சிராங்கூன் ரோட்டில் வேகமாய் வந்து கொண்டிருந்த போது - ஒரு பாதசாரி மேல் மோதி விட்டேன். தவறு பாதசாரி மேல்தான் என்றாலும் - போலீஸ் விசாரணை முடிந்து நான் ஹாஸ்பிடல் வர மதியமாகிவிடும்..."

"டாக்டர்! போஸ்ட்மார்ட்டம்?"

"வேறு எந்த டாக்டராவது மேற்கொள்வார்கள்" - சொல்லிவிட்டு அவர் ரிஸீவரை வைத்துவிட - பிரணவ் வியர்த்து விறுவிறுத்துப் போய் - யோகேஷ், புவனேஷிடம் வந்தார். விவரத்தைச் சொன்னதும் இருவரும் நிறம் மாறி னார்கள்.

"பிரணவ்! நாம் தொலைந்தோம்..." யோகேஷ் சொன்ன அதே விநாடி - பின் பக்கம் அந்தக் குரல் கேட்டது.

"எக்ஸ்க்யூஸ்மீ..."

திரும்பினார்கள். செல்லுலாயிட் பொம்மை மாதிரி அந்த நர்ஸ் நின்றிருந்தாள்.

"எஸ்..."



"டாக்டர் உங்கள் மூன்று பேரையும் வரச் சொன்னார்."

கர்ச்சீப்பால் முகவியர்வையை ஒற்றிக் கொண்டே நர்ஸைப் பின் தொடர்ந்து போய் - அந்த ஏர்க்கண்டிஷனர் உறுமும் அறைக்குள் நுழைந்தார்கள்.

மஞ்சள் பூசிக் குளித்த கைகளில் - மினுமினுப்பாய் தெரிந்த அந்த டாக்டர் - முகத்தில் மலர்ச்சி இல்லாமல் நாற்காலி களைக் காட்டினார்.

உட்கார்ந்தார்கள். டாக்டர் கேட்டார்.

## 9

"**போ**லீஸ் வந்திருந்தார்களே...? ஏதாவது விவகாரமா?"

"விவகாரம் ஒன்றுமில்லை டாக்டர்... ஒரு விபத்தைப் பற்றி விசாரிக்க வந்தார்கள்..." - பிரணவ் சொன்னார்.

"நீங்கள் நினைப்பது போல் இது சாதாரண விவகாரம் இல்லை...! இப்போதுதான் போலீஸ் கமிஷனர் எனக்குப் போன் செய்தார்..."

"எ... என்ன விஷயமாய்?"

"இந்திய நபர் இரண்டு பேர் கொண்டு வந்திருக்கும் பெட்டியை முழு அளவில் போஸ்ட்மார்ட்டம் செய்து விரிவான ரிப்போர்ட்டைத் தரவேண்டுமாம். விவகாரம் இல்லாமல் போலீஸ் கமிஷனர் போன் பண்ணமாட்டாரே?"

பிரணவ் எச்சில் விழுங்கினார் பயமாய்.

''போலீஸ் வீணாய் சந்தேகப்படுகிறார்கள்.''

''அவர்களுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டியது என் கடமை. போஸ்ட் மார்ட்டம் முழு அளவில் நடந்து முடிய மூன்று மணி நேரமாகும். உங்கள் மூன்று பேருக்கும் வெளியே செல்ல அனுமதியில்லை. ஹாஸ்பிடலில்தான் இருக்க வேண்டும்...''

டாக்டர் சொல்லிக்கொண்டே - நாற்காலியின் முதுகில் தொங்கிய - வெள்ளைக்கோட்டை மாட்டிக் கொண்டு - போஸ்ட் மார்ட்டத்திற்குக் கிளம்பினார்.

அறையில் நிசப்தம். பிரணவ், யோகேஷ், புவனேஷ் மூன்று பேரும் டாக்டர் இருக்கச் சொல்லிவிட்டுப் போன அறைக்குள் இருட்டடித்த முகங்களோடு ஒருத்தரையொருத்தர் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள். கண்களில் கணிசமான பயம்.

யோகேஷ் தவிப்பான குரலில் கேட்டான். ''பிரணவ்! நாம் எசகுபிசகாய் மாட்டிக்கொண்டு விட்டோம். தப்பிக்க ஏதாவது வழி இருக்கிறதா?''

''சுத்தமாக இல்லை'' - பிரணவ் உதட்டைப் பிதுக்கினார்.

''இங்கிருந்து ஓடிப்போய்விட்டால் என்ன?''

''எங்கே ஓடமுடியும்? அப்படியே ஓடினாலும் சிங்கப்பூர் போலீஸ் உங்களையும் என்னையும் ஒன்றிலிருந்து பத்து சொல்வதற்குள் பிடித்துவிடும்.''

யோகேஷ் தலையிலடித்துக் கொண்டான். ''டாக்டர் பிங் - யெங்கை நம்பி ஏமாந்துவிட்டோம்.''

''நம் போதாத வேளை... அவர் ஒரு விபத்தில் மாட்டிக் கொண்டு விட்டார்...''

''பிரணவ்! நாம் இந்த டாக்டரைச் சமாளிக்க முடியாதா?''



''சமாளிப்பது என்றால்?''

''வைரங்களில் அவருக்கு ஒரு பங்கு கொடுத்து விடலாம்.''

''அதற்கெல்லாம் மசிகிற ரகம் இவரில்லை... யோகேஷ்.''

''பேசிப் பாருங்கள்.''

''வீண் முயற்சி... இந்த டாக்டர் கண்டிப்பானவர்.''

ஒன்றும் பேசாமல் நகத்தைக் கடித்தபடி - உட்கார்ந்திருந்த புவனேஷை ஏறிட்டான் யோகேஷ். ''என்ன புவனேஷ் நாங்க ரெண்டு பேரும்... ஏகப்பட்ட டென்ஷன்ல இருக்கோம். நீ பாட்டுக்கு நகத்தைக் கடிச்சிக்கிட்டு உட்கார்ந்திருக்கே?''

''என்னால் என்ன பண்ண முடியும்?''

''ஏதாவது யோசனை சொல்லேன்...''

''தலைக்குமேலே வெள்ளம் போயிட்டிருக்கு. இனிமே என்ன யோசனை வேண்டிக்கிடக்கு?''

புவனேஷ் எரிச்சலாய்ச் சொல்ல - மூன்று பேருக்கும் மத்தியில் - மறுபடியும் நீளமான மௌனம். நிமிஷங்கள் அவஸ்தையாய்க் கரைந்து கொண்டிருக்க - சரியாய் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு -

டாக்டர் உள்ளே வந்தார்.

சோர்வான முகத்தோடு நாற்காலியில் சாய்ந்தார். பிரணவ் அவரைத் தயக்கமாய் ஏறிட்டுக் கேட்டார். ''டாக்டர்! போஸ்ட்மார்ட்டம்?''

''முடிந்துவிட்டது. இந்தியா போகும்வரை உடம்பு கெட்டுப் போகாமல் இருப்பதற்காக - மருத்துவ ரீதியான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் உதவியாளர்கள். உடம்பை நீங்கள் இங்கிருந்தே ஏர்போர்ட்டுக்குக் கொண்டு போய் விடுங்கள்...''

மெல்லிய குரலில் - டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே - மேஜை மேலிருந்த டெலிபோன் கனைத்தது. செவ்வக ரிஸீவரை எடுத்துக் காதுக்குக் கொடுத்தார்.

''போலீஸ் ஹெட் குவார்ட்டர்ஸா? கொடுங்கள்.''

''....''

''ஆமாம்... நான் டாக்டர் பேசுகிறேன்.''.

''.........''

''போஸ்ட்மார்ட்டம் முடிந்து விட்டது. இயற்கை மரணம். காரணம் மாரடைப்பு. உடம்பில் அசாதாரணமாக ஏதுவுமில்லை...''

''.........''

''சந்தேகம் வேண்டாம். முழு அளவிலான போஸ்ட் மார்ட்டம்... இது... சந்தேகப்படும்படியாக எதுவும் இல்லை.''

''........''

''இந்தியாவுக்குத் தாராளமாய் அனுப்பி விடலாம்...''

''........''

''நன்றி...'' டாக்டர் ரிஸீவரை வைத்துவிட்டு - புன்னகையோடு நிமிர்ந்தார். மூன்று பேரையும் ஏறிட்டுக் கேட்டார். ''போலீஸ் உங்கள் மேல் ஏன் இவ்வளவு சந்தேகப்படுகிறார்கள்?''

''நடந்த வைரத் திருட்டில் எங்களுக்கு ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்பது அவர்களுடைய எண்ணம்.''

''ஏன் அப்படி நினைக்கிறார்கள்?''

''விபத்து நடந்த இடத்தில் எங்களுடைய கார் நின்றிருந்ததுதான் காரணம். உண்மையில் அந்த விபத்தைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது...''



சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்த நர்ஸ் அறைக்குள் நுழைந்து - சீன மொழியில் ஏதோ சொன்னாள். டாக்டர் உன்னிப்பாய் கேட்டுவிட்டுப் பிரணவிடம் திரும்பினார்.

''உடலை இந்தியாவுக்குக் கொண்டு போகும் வகையில் பதப்படுத்திவிட்டார்கள். உடலைப் பார்க்கிறீர்களா?''

''ஆமாம்'' - யோகேஷ் அவசரக் குரலில் சொன்னான்.

டாக்டர் நர்ஸுக்குக் கண்ணைக் கட்ட - அவள் அவர்களைக் கூட்டிக் கொண்டு போனாள். சுத்தமான ஒரு பங்களாவுக்குள் நடந்து போவதைப் போன்ற பிரமை யோகேஷுக்கும், புவனேஷுக்கும். நர்ஸ் முன்னால் நடந்து கொண்டிருக்க -

பிரணவ் யோகேஷின் தோளைத் தொட்டு மெதுவான குரலில் கேட்டார். ''இது எப்படிச் சாத்தியம் யோகேஷ்? போஸ்ட் மார்ட்டம் முழு அளவில் நடந்திருக்கிறது. டாக்டரின் கண்களில் இந்த வைரங்கள் அடங்கிய பாலிதீன் பை படாமல் இருக்க நியாயமில்லையே?''

''ஒருவேளை, தலை முகம் இவற்றைப் போஸ்ட்மார்ட்டம் செய்யாமல் விட்டிருப்பாரோ?''

''போஸ்ட்மார்ட்டம் என்றாலே முதலில் தலையை உடைத்து மூளை பாகத்தை வெளியே எடுத்து வைப்பார்கள். முகமும் நிச்சயமாய்ப் போஸ்ட்மார்ட்டத்திற்கு உட்பட்டிருக்கும்.''

''அப்படியானால் அந்த வைரங்கள்...?''

''அதுதான் குழப்பமாக இருக்கிறது...''

நர்ஸ் கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு - ஜில்லிப்பான அறைக்குள் நுழைந்தாள். மூன்று பேரும் தொடர்ந்து உள்ளே போனார்கள். ஏர்க்கண்டிஷனில் பார்மலின் நாறியது.

''பாருங்கள்'' - ஒரு பீங்கான் தொட்டியை நோக்கிக் கையைக் காட்டினாள் நர்ஸ். இவர்கள் நடந்து போய் எட்டிப் பார்த்தார்கள்.

மார்த்தாண்டம் தொட்டியில் மல்லாந்து தெரிந்தார். உடம்பு முழுக்க பாண்டேஜ் மயம். முகம் மட்டும் தெரிந்தது. '0' மாதிரி திறந்திருந்த வாயை உற்றுப் பார்த்தான் யோகேஷ். வாய்க்குள் எதுவும் இருக்கிற மாதிரி தோன்றவில்லை.

பிரணவ் குனிந்து பார்த்தார்.

மார்த்தாண்டத்தின் கீழ்வரிசைப் பற்களும், அதற்கு பின்னணியில் கறுப்பான வாயின் உட்புறமும் மட்டுமே தெரிந்தன. உள்ளே வைரங்கள் இருப்பதற்கான சாத்தியமே இல்லை.

யோகேஷ் நர்ஸிடம் திரும்பினான்.

''எதற்காக இப்படி உடலை பாண்டேஜால் சுற்றி வைத்திருக்கிறீர்கள்?''

நர்ஸ் புன்னகைத்தாள். ''உடல் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக சில மருத்துவக் கலவைகளை உடம்பின் உள் உறுப்புகளில் சேர்த்திருக்கிறோம். அந்த மருத்துவக் கலவை கசியக் கூடியவை. ஆகவேதான் பஞ்சை வைத்து உடம்பு முழுவதும் இறுக்கமாய் பாண்டேஜ் போட்டிருக்கிறோம். நீங்கள் ஃபிளைட்டுக்கு ஏற்பாடு செய்துவிட்டு இங்கிருந்தே உடலைக் கொண்டு போய் விடலாம்.''

''நர்ஸ்'' - யோகேஷ் தயக்கமாய்க் கூப்பிட்டான்.

''சொல்லுங்கள்'' என்றாள் அவள்.

''எங்களுடைய அப்பாவின் உடம்பை போஸ்ட்மார்ட்டம் செய்யும்போது நீங்களும் உடன் இருந்தீர்களா?''

''ஆமாம்...''

''டாக்டர் ஏதாவது சொன்னாரா?''

பிரணவ் பின் பக்கமாயிருந்து யோகேஷின் கையைப் பிடித்து அழுத்தினார். ''எதுவும் கேட்காதே'' என்பது போல் கண்ணைக் காட்டினார். யோகேஷ் எதையோ சொல்லிச் சமாளித்தான்.



நர்ஸ் கேட்டாள்.

''ஃபிளைட்டுக்கு எப்போது ஏற்பாடு செய்து விட்டு வருவீர்கள்?''

''இதோ புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம்'' ஜில்லிப்பான அறையினின்றும் - மூன்று பேரும் வெளியே வந்தார்கள். மௌனமாய் நடந்து ஆஸ்பத்திரியின் போர்டிகோவைத் தொட்டபோது பிரணவ் சொன்னார்.

''நீங்கள் இங்கேயே நில்லுங்கள். நான் போய் பார்க்கிங்கிலிருந்து காரை எடுத்து வருகிறேன்'' - அவர் கொஞ்சத் தொலைவிலிருந்த கார் பார்க்கிங்கை நோக்கி நகர்ந்து போக யோகேஷ் பெருமூச்சு விட்டான். கூப்பிட்டான்... ஆயாசமான குரலில்,

''புவனேஷ்.''

''ம்...''

''அந்த வைரங்கள் என்னாகியிருக்கும்னு நினைக்கிறே...?''

''தெரியலை...''

''போஸ்ட்மார்ட்டம் பண்ணின அந்த டாக்டர் எடுத்திருப்பாரோ...? இப்போ திருடனுக்குத் தேள் கொட்டிட்ட நிலைமையில நாம இருக்கோம்...''

புவனேஷ் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறே...?'' எரிச்சலாய்க் கேட்டான் யோகேஷ்.

''நான் ஒரு சந்தோஷமான நியூஸைச் சொல்லட்டுமா?''

''சந்தோஷமான நியூஸா? என்னது?''

''அந்த வைரங்கள் எங்கேயும் போகலை.''

''பின்னே?''

''என்கிட்டதான் இருக்கு...''

திக்கென்று நிமிர்ந்தான் யோகேஷ்.

''பு... பு... புவனேஷ்... நீ... என்ன சொல்றே?''

''இந்த நிமிஷம்... என்னோட பேண்ட் பாக்கெட்டுக்குள்ள அந்த வைரங்கள் இருக்குன்னு சொல்றேன்.''

''எ... எப்படி?''

புவனேஷ் மெல்லிய குரலில் சொன்னான். ''நேத்து ராத்திரி முதல் எம் மனசுக்குள்ளே ஒரு பயம்... போஸ்ட் மார்ட்டம் பண்ணப் போகிற டாக்டர் பிங் யெங் நமக்கு விசுவாசமா நடந்துக்குவார்ன்னு நாம எப்படி எதிர்பார்க்க முடியும்? அவர் ஏதாவது சில்மிஷம் பண்ணிட்டா விஷயம் வெட்ட வெளிச்சத்துக்கு வந்துடுமே? ஸோ... போஸ்ட் மார்ட்டம் முடிந்து பாடி நம்மகிட்டே வர்ற வரைக்கும் - வைரங்கள் அப்பாவோட உடம்புல இருக்கிறது தப்புங்கிற முடிவுக்கு வந்தேன். உன்கிட்டே சொன்னா வைரங்களை வெளியே எடுக்கிறதுக்கு சம்மதிக்கமாட்டே! அதனால் நேத்து ராத்திரி நீ தூங்கினதும் வைரங்களை எடுத்துப் பத்திரப் படுத்திக்கிட்டேன்.''

யோகேஷ் சந்தோஷம் தாங்காமல் - புவனேஷைக் கட்டிக் கொள்ள முயன்றபோது - அவன் கீழ்ஸ்தாயியில் எச்சரித்தான்.

''சந்தோஷத்தைக் காட்டிக்காதே யோகேஷ்! பிரணவிற்கு இந்த விஷயம் தெரியக்கூடாது. வைரங்களுக்கு என்னாச் சோன்னு, அவர்கூடச் சேர்ந்துகிட்டு நாம்பளும் கவலைப் படணும். பெருமூச்சு விடணும். டென்ஷனா இருக்கணும்.''

''பு... புவனேஷ்...''

''பார்த்தியா... ரொம்பவும் சந்தோஷப்படறே! நாம சந்தோஷமாயிருந்தா பிரணவுக்கு சந்தேகம் வந்துடும்... போஸ்ட்மார்ட்டம் முடிகிறவரைக்கும் நான் எப்படியிருந் தேன்னு கொஞ்சம் யோசிச்சுப் பாரு. என்கிட்ட வைரங்கள் இருந்திருந்தாலும் மூஞ்சியை எப்படி வெச்சுக்கிட்டேன். அது மாதிரி நீயும் இரு...''



யோகேஷ் சந்தோஷத்தை அடக்கிக்கொள்ள புவனேஷ் தொடர்ந்தான். ''போஸ்ட்மார்ட்டம் பண்ணின டாக்டர்தான் அந்த வைரங்களை எடுத்திருக்கணும்ங்கிற எண்ணத்தை உருவாக்கணும். பிரணவ் டாக்டர்கிட்டே இதை வெளிப் படையாகக் கேட்கவும் முடியாது.''

''சரி... பேச்சை நிறுத்திக்கோ! பிரணவ் காரைக் கொண்டு வந்து விட்டார். வைரங்கள் பேண்ட் பாக்கெட்டில்தானே இருக்கு?''

''ஆமா...''

''பத்திரம்...''

பிரணவ் காரைப் போர்டிகோவில் கொண்டு வந்து நிறுத்தி னார். முன்சீட்டில் யோகேஷும், பின் சீட்டில் புவனேஷும் ஏறிக்கொண்டார்கள். பிரணவ் கேட்டார். காரை நகர்த்திக் கொண்டே...

''முதலில் எங்கே போகிறோம் யோகேஷ்?''

''சாங்கி ஏர்போர்ட்.''

''ஏர்போர்ட்டுக்குப் போவதற்கு முன்னால் - வேறொரு முக்கியமான இடத்திற்குப் போக வேண்டியிருக்கிறது யோகேஷ்...''

## 10

பிரணவ் மெல்லச் சிரித்தார். ''என்ன, இரண்டு பேரும் அப்படியே அதிர்ந்து போய் உட்கார்ந்து விட்டீர்கள்...?

என்னை நீங்கள் எந்த நிலையிலும் ஏமாற்ற முடியாது. அப்படி ஏமாற்ற நினைத்தால் நீங்கள்தான் ஏமாந்து போவீர்கள்.''

புவனேஷும் யோகேஷும் அவஸ்தையான பார்வைகளோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். பிரணவ் இன்னமும் அதே சிரிப்போடு யோகேஷிடம் திரும்பினார். ''யோகேஷ்! நீயும் நானும் உன்னுடைய அப்பாவின் போஸ்ட் மார்ட்டத்தைப் பற்றிப் பயமாய் - பதட்டமாய் பேசிக் கொண்டிருந்தபோது - உன்னுடைய அண்ணன் புவனேஷ் மட்டும் சாவதானமாய் உட்கார்ந்திருந்தான். நான் என்னுடைய தரகு வியாபாரத்தில் கற்றுக் கொண்ட முதல் பாடமே மனிதர்களைப் படிப்பதுதான்.''

''பி...ர...ண...வ்...''

''மோசமான பிசினஸைச் செய்தாலும் அதில் நேர்மை இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவன் நான். இப்போது சொல்லுங்கள். ஏர்போர்ட்டிற்குப் போகலாமா? போலீஸ் ஹெட்குவார்ட்டர்ஸிற்குப் போகலாமா...? உங்களுடைய விருப்பம் எதுவோ அப்படியே செய்யலாம்.''

''ஸாரி பிரணவ்...! வைரங்கள் என்னிடம்தான் இருக்கின்றன...'' - புவனேஷ் சொல்லி விட்டுக் குனிந்து கொண்டான்.

''உங்களுடைய நடவடிக்கைகள் எப்படி அமைகிறதோ... அப்படித்தான் என்னுடைய நடவடிக்கைகளும் அமையும். இனிமேல் இந்தத் தில்லுமுல்லுத்தனமெல்லாம் என்னிடம் வேண்டாம். ஏர்போர்ட்டுக்குப் போலாமா?''

''போகலாம்.''

காரை ஹாஸ்பிடலின் காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே கொண்டு வந்து வேகம் பிடித்தார் பிரணவ். காலை நேர சிங்கப்பூர் ரோடுகளில் போக்குவரத்து கொஞ்சம் கொஞ்சமாய் அதிகப்பட்டுக் கொண்டிருந்தது.



''பிரணவ்'' யோகேஷ் கூப்பிட்டான்.

''என்ன?'' திரும்பிப் பார்த்தார்.

''வைரங்களைத் திரும்பவும் அப்பாவின் உடம்புக்குள் கொண்டு போக வேண்டும்... மார்ச்சுவரியில் உடல் இருக்கும்போது - அது எப்படிச் சாத்தியம்?''

''அதைப் பின்னால் யோசித்துக் கொள்ளலாம். முதலில் ஏர்போர்ட் போய் ஃப்ளைட்டுக்கு ஏற்பாடு செய்வோம். உங்களுக்கு எப்போது ஃபிளைட் என்று தெரிந்த பின்தான் செயல்பட வேண்டும்.''

புவனேஷ் குறுக்கிட்டுச் சொன்னான். ''பிரணவ்! இனிமேல் உங்களை நாங்கள் ஏமாற்ற மாட்டோம். வைரங்களை அப்பாவின் உடலில் வைத்து - இந்தியா கொண்டு போக நீங்கள் தான் உதவ வேண்டும். சிங்கப்பூர் போலீஸ் ஜுர வேகத்தோடு இந்த வைரங்களுக்காக - இயங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் எங்களுக்கு அடி வயிற்றைக் கலக்குகிறது.''

''பயப்பட வேண்டாம். போலீஸைச் சமாளிக்க நானாயிற்று.''

கார் சிங்கப்பூரின் காலை நேர ரோடுகளைத் தேய்த்து - சாங்கி ஏர்போர்ட் போய்ச் சேர்ந்தபோது - ஏர்போர்ட்டின் லௌன்ச்சுக்குள் நிறைய சிங்கப்பூர் போலீஸ் தலைகள்... தெரிந்தன.

பார்க்கிங்கில் காரைக் கொண்டு போய் நிறுத்திய பிரணவ், புவனேஷிடம் திரும்பினார். ''புவனேஷ்! நீ காருக்குள்ளேயே இரு... கீழே இறங்காதே! நானும் யோகேஷும் மட்டும் ஏர்போர்ட்டுக்குள் போய் விசாரித்து விட்டு வருகிறோம்.

புவனேஷ் தலையாட்ட -

யோகேஷும் பிரணவும் காரினின்றும் இறங்கி - ஏர்போர்ட்டின் லௌன்ச்சை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

"யோகேஷ்! பார்த்தாயா? எவ்வளவு போலீஸ்!"

"அந்த வைரங்களுக்காகவா?"

"ஆமாம்."

"போலீஸின் இந்தக் கெடுபிடிகளைப் பார்க்கும்போது - வைரங்களை இந்தியாவுக்குக் கொண்டு போக முடியும் என்கிற நம்பிக்கை எனக்குக் குறைந்து வருகிறது பிரணவ்."

"சத்தமாய் எதுவும் பேசாதே...! சிங்கப்பூர் க்ரைம் பிராஞ்ச்சைச் சேர்ந்த போலீஸ் அதிகாரிகள் பிரயாணிகளைப் போல் - லௌன்ச்சில் ஊடுருவியிருப்பார்கள்."

யோகேஷ் வாயை மூடிக் கொண்டான்.

கண்ணாடித் தரையில் பிம்பங்கள் பிரதிபலிக்க நடந்து டைம்ஸ் எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிமிடெட்டை நெருங்கினார்கள். நேற்று நள்ளிரவு பார்த்த அதே நபர் கௌண்டரின் மறுபக்கத்தில் இருந்து கொண்டு யோகேஷைப் பார்த்துப் புன்னகைத்தார். கேட்டார்.

"என்ன, போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வாங்கி விட்டீர்களா?"

"ரிப்போர்ட்டும், டெத் சர்டிபிகேட்டும் அடுத்த இரண்டு மணி நேரத்தில் கிடைத்து விடும். இன்று மாலைக்குள் ஏதாவது ஃப்ளைட் கிடைத்தால் எங்களுக்கு வசதியாக இருக்கும்."

"இரவு பத்து மணிக்கு ஒரு ஃப்ளைட் இருக்கிறது. அதில் ஏற்பாடு செய்யட்டுமா?"

யோகேஷ் தனக்குப் பின்னால் நின்றிருந்த பிரணவை திரும்பிப் பார்த்தான். "இரவு நேர ஃப்ளைட் உசிதமா... பிரணவ்?"

"பிரச்னையில்லை. இருக்கலாம்."

யோகேஷ் கௌண்டருக்குள் இருந்த இளைஞனை ஏறிட்டான். "சரி, ஏற்பாடு செய்து விடுங்கள்."



அவன் இளஞ்சிவப்பு நிறத்தில் ஒரு பாரத்தை நீட்டி - "இதை முறையாகப் பூர்த்தி செய்து முன் பணமாக அதில் குறிப்பிட்டிருக்கும் தொகையைச் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளுங்கள். போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டையும் - டெத் சர்டிபிகேட்டையும் சரி பார்த்த பின்னர் உங்களுக்கு ஃப்ளைட்டில் இடம் ஒதுக்கப்படும்" என்றான்.

யோகேஷும் பிரணவும் அந்தப் பாரத்தை வாங்கிக் கொண்டு பக்கத்திலிருந்த இன்க்ளையண்ட் மேஜைக்குப் போய் உட்கார்ந்தார்கள். பத்து நிமிஷ நேரத்தைச் செலவழித்துப் பாரத்தைப் பூர்த்தி செய்து முன் பணம் கட்டி ரசீதை வாங்கிக் கொண்டார்கள்.

"பி.எம். ரிப்போர்ட்டும், டெத் சர்டிபிகேட்டும் மதியத்திற்குள் கொண்டு வருகிறோம்."

"ப்ளீஸ்..." கௌண்டர் இளைஞன் பவ்யமாய்த் தலையாட்ட பிரணவும் யோகேஷும் மெல்ல நகர்ந்தார்கள்.

பத்தடி தொலைவு நடந்ததுமே யோகேஷ் கேட்டான். "இரவு நேர ஃப்ளைட் நமக்குப் பாதுகாப்பானதா பிரணவ்...?"

"நிரம்ப..."

"எப்படி?"

"சாங்கி ஏர்போர்ட்டுக்கு இரவு நேரப் பயணிகள் தான் அதிகம். கும்பல் அதிகமாக இருக்கும்போது - கஸ்டம்ஸ் அதிகாரிகள் சோதனைகளை விரைவாக முடிப்பார்கள். அதுவும் 'டெட்பாடி' விவகாரம் என்றால் - அதி விரைவாக முடித்து அனுப்புவார்கள்."

"ஒவ்வொரு படியாய் முன்னேறுகிறோம் பிரணவ். ஃப்ளைட் டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்து விட்டோம். இனி அந்த வைரங்களை அப்பாவின்... உடம்பில்... எ... எ...ப்படியாவது..."

பேச்சை முடிக்கும்முன்பு -

யோகேஷின் தோளில் மிருதுவாய் ஒரு கை விழுந்தது. திடுக்கிட்டுப்போய் திரும்பினான்.

கருநீல யூனிபார்மில் பச்சை நிறக் கண்களோடு அந்த சிங்கப்பூர்ப் போலீஸ் அதிகாரி உயரமாய் நின்றிருந்தார். பார்வையால் அவனை ஊடுருவிக் கொண்டே கேட்டார்.

''இண்டியா?''

''ஆமாம்...''

''உங்கள் பாஸ்போர்ட்டைப் பார்க்கலாமா?''

பேண்ட் பாக்கெட்டில் தயாராய் வைத்திருந்த பாஸ்போர்ட்டை எடுத்து நீட்டினான். அவர் அதை வாங்கிப் பார்த்துவிட்டுக் கேட்டார்.

''டைம்ஸ் எக்ஸ்பிரஸ்ஸுக்கு எதற்காக வந்தீர்கள்?''

யோகேஷ் பேசுவதற்காகத் திணற - பிரணவ் குறுக்கிட்டு விஷயத்தைச் சொன்னார். மையமாய்த் தலையாட்டிக் கொண்டே விஷயத்தைக் கேட்டுவிட்டு நிமிர்ந்தார் போலீஸ் அதிகாரி.

''இறந்தவருக்கு என்ன வயது?''

''ஐம்பத்தைந்து.''

''இன்றிரவு ஃபிளைட்டில் உடலைக் கொண்டு போகிறீர்களா?''

''ஆமாம்.''

பாஸ்போர்ட்டை யோகேஷின் கையில் திணித்தார் அதிகாரி. ''நீங்கள் போகலாம்.''

யோகேஷ் இயல்பாக மூச்சு விட்டுக்கொண்டு பிரணவ்வோடு கார் பார்க்கிங்கை நோக்கி நடந்தான். பிரணவ் சொன்னார்.



''வெளிநாட்டு ஆள் என்று தெரிந்தால் போதும். நிறுத்தி வைத்து விசாரிக்கிறார்கள். அங்கே பார் ஓர் அமெரிக்க இளைஞன் போலீஸ் அதிகாரியிடம் படும் பாட்டை.''

யோகேஷ் திரும்பிப் பார்த்தான்.

போலீஸ் சார்ஜெண்ட் ஒருவர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறிக் கொண்டிருந்தான் ரத்தச் சிவப்பாய் இருந்த அந்த அமெரிக்க இளைஞன்.

யோகேஷ் வியர்த்த தன் முகத்தைக் கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டான். ''இந்தக் கெடுபிடிகளைப் பார்க்கும்போது வயிற்றைக் கலக்குகிறது பிரணவ்.''

''இயல்பாய் இரு... இப்படி வேர்த்து வழியாதே.'' சொல்லிக் கொண்டே பிரணவ் நடக்க அவரைத் தொடர்ந்து ஏர் போர்ட் லௌன்ச்சை விட்டு வெளியே வந்தான் யோகேஷ். கார் பார்க்கிங்கைத் தொட்டு காரைச் சமீபித்தார்கள்.

காரின் பின் சீட்டில் கண்மூடிச் சாய்ந்து உட்கார்ந்திருந்தான் புவனேஷ். கதவைத் திறந்து உள்ளே போனார்கள்.

யோகேஷ் கூப்பிட-

அவன் தலையை ஒரு பக்கமாய்ச் சாய்த்து தளர்வாய் தெரிந்தான்.

''இருக்கிற டென்ஷனில் இவனுக்கு எப்படித்தான் தூக்கம் வருகிறதோ?''

யோகேஷ் - வாய்விட்டு - திட்டிக் கொண்டே புவனேஷின் தோளைத் தட்டினான். புவனேஷ் 'திடும்'மென்று கண்விழித்தான். கைகளை உயரத் தூக்கிச் சோம்பல் முறித்துக் கொண்டான்.

''என்ன, போய்ட்டு வந்துட்டீங்களா?''

''ம்... ராத்திரி பத்து மணிக்கு ஃபிளைட். ஆமா. இருக்கிற டென்ஷன்ல உனக்கு எப்படித் தூக்கம் வருது?''

''ராத்திரி முழுக்கத் தூக்கமில்லை யோகேஷ். அதான் அசந்துட்டேன்.''

''கிளம்பலாமா?'' பிரணவ் கேட்டார்.

''ம்''

''உங்களை எங்கே ட்ராப் பண்ணட்டும்?''

''ஹாஸ்பிடல். ஏன் நீங்கள் வரவில்லையா பிரணவ்?''

''இல்லை... எனக்கு வெளியே ஓர் அவசர வேலை இருக்கிறது. போய் அதைக் கவனித்து விட்டு மதியம் ஒரு மணிக்குள் திரும்பி விடுவேன். நான் வருவதற்குள் நீங்கள் டெத் சர்டிபிகேட்டையும், பி.எம். ரிப்போர்ட்டையும் வாங்கி வையுங்கள். மற்றதைப் பிறகு பேசிக் கொள்வோம்.''

கார் கிளம்பியது. ஏர்போர்ட்டைத் தாண்டியதும் வேகம் பிடித்தது.

மதியம் இரண்டு மணி.

ஹாஸ்பிடலின் வரவேற்பு அறையில் காத்திருந்தார்கள் - யோகேஷும் புவனேஷும். கையிலிருந்த சிறு ஃபைலில் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டும் டெத் சர்டிபிகேட்டும் அடைக்கலமாயிருந்தன. புவனேஷ் தவிப்பாய் நடை போட்டுக் கொண்டே சொன்னான். ''யோகேஷ்! மத்தியானம் ஒரு மணிக்குள்ளே வந்துடறேன்னு சொன்ன பிரணவ்வை இன்னமும் காணோமே? அப்பாவோட உடம்புல வைரங்களை மறைச்சு வெக்க ஏதோ யோசனை சொல்றதா சொல்லியிருந்தார். இந்த ஆள் விவரம் புரியாமே எங்கே போனார்?''

''அவசரப்படாதே, புவனேஷ்! அவருக்கும் இதுல ஆதாயம் இருக்கு. கொஞ்சம் முன்னே பின்னேயானாலும் வந்துடுவார்.''

''பிரணவ் இல்லாமே அப்பாவோட உடம்புல நாம வைரங்களை ஒளிச்சு வெக்க முடியாதா?''



''எப்படி முடியும்?''

''அப்பாவோட உடம்பை மறுபடியும் பார்க்கணும்னு டாக்டர் கிட்டே சொல்லிட்டு மார்ச்சுவரிக்குப் போவோம்.''

''கூடவே ஆஸ்பத்திரி சிப்பந்தி எவனாவது வருவானே? நாம பாடியைப் பார்த்திட்டிருக்கும் போது அவனும் பக்கத்திலேயே நின்னுட்டிருப்பானே? பிரணவ் வந்துரட்டும். அவர் யோசனைப்படியே செய்வோம். நாம அவசரப்பட்டு எதையாவது பண்ணப் போக அதுவே சிக்கலாயிடும்.''

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே-

நீல நிறப் போலீஸ் பெட்ரோல் கார் ஹாஸ்பிடல் காம்பௌண்ட்டுக்குள் நுழைந்து இவர்கள் நின்றிருந்த போர்டிகோவை நோக்கி நீந்தி வந்தது.

''யோகேஷ்! மறுபடியும் போலீஸ் கார்.''

''பதட்டம் காட்டாமே நில்லு!''

போர்டிகோவில் வந்து நின்ற காரிலிருந்து இரண்டு சார்ஜெண்ட்கள் இறங்கினார்கள். நேராக ரிசப்ஷன் கௌன்டர்க்குப் போய் அங்கிருந்த பெண்ணிடம் ஏதோ கேட்க அவள் யோகேஷையும், புவனேஷையும் நோக்கிக் கையைக் காட்டினாள்.

சார்ஜெண்ட்ஸ் இவர்களையே நேர் பார்வை பார்த்துக் கொண்டு வந்தார்கள். ''மிஸ்டர் புவனேஷ் அண்ட் மிஸ்டர் யோகேஷ்?'' கேட்டார்கள்.

''எஸ்...''

''நீங்கள் உடனே எங்களோடு புறப்பட வேண்டும்.''

''எதற்கு?''

''பிரணவ் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.''

# 11

புவனேஷும் யோகேஷும் அதிர்ந்து போய்ப் போலீஸ் சார்ஜெண்ட்களை ஏறிட்டார்கள். ''என்ன சொல்கிறீர்கள்? பிரணவ் கொலை செய்யப்பட்டாரா...?''

''ஆமாம்.''-சார்ஜெண்ட் தலையாட்டினார்.

''யா... யார் செய்தார்கள்?'' - புவனேஷ் தடுமாற்றமாய்க் கேட்டான்.

''அதை நீங்கள் தான் சொல்ல வேண்டும்.''

''நாங்களா? எங்களுக்கென்ன தெரியும்?''

''அவர் இறப்பதற்கு முன் உங்கள் பெயர்களைத்தான் சொன்னார். உங்களோடு பேச விரும்புவதாகச் சொல்லி நீங்கள் இருக்கிற இடத்தைச் சொன்னார். அதனால்தான் வந்தோம்.''

இருண்டு போன முகங்களோடு யோகேஷும் புவனேஷும் ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். யோகேஷ் சார்ஜெண்ட் ஒருவரிடம் கேட்டான்.

''பிரணவ் எங்கே கொலை செய்யப்பட்டார்?''

''அடீஞ் ரோட்டில் அவர் காரில் வந்து கொண்டிருந்த போது யாரோ இரண்டு பேர் மற்றொரு காரில் பின் தொடர்ந்து வந்து பின் பக்கக் கண்ணாடி வழியாக அவரை மெஷின் கன்னால் சுட்டிருக்கிறார்கள். முதுகிலும் பின்னங்கழுத்திலும் குண்டுகள் பாய்ந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அவரை ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போனோம். போகிற



வழியிலேயே இறந்து விட்டார். ஆனால் அவர் இறக்கும் போது தனக்கிருந்த - சுயநினைவில் உங்களுடைய பெயர் களைச் சொன்னார். உங்களோடு பேச விரும்புவதாகக் கூறி ஹாஸ்பிடல் அட்ரஸையும் சொன்னார். சொன்ன அடுத்த சில நிமிஷங்களில் இறந்துவிட்டார். அவர் உங்களுடைய பெயர் களைக் கூறியதால் ஒரு வேளை உங்களுக்குக் கொலையாளி களின் பெயர் தெரிந்திருக்கலாமென்று நினைத்து வந்தோம்.''

''மன்னிக்கவும். எங்களுக்குத் தெரியாது.''

''சரி... ஹாஸ்பிடலுக்கு வாருங்கள். உங்களிடம் ஒரு முறை யான விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.''

காவி நிறத்தில் பிரும்மாண்டமாய்ப் பரவியிருந்த அந்த ஹாஸ்பிடலின் நுழைவாயிலுக்குள் போலீஸ் கார் நுழைந்து வேகத்தைச் சற்றும் குறைக்காமல் போர்டிகோவில் போய் நின்றது. முன்பக்கம் உட்கார்ந்திருந்த சார்ஜெண்ட்கள் திரும்பி யோகேஷுக்கும் புவனேஷுக்கும் கண்ணைக் காட்ட அவர் கள் இறங்கினார்கள்.

இரண்டு பேர்களின் முகங்களிலும் திப்பித் திப்பியாய்த் திகில். சார்ஜெண்ட்கள் இரண்டு பக்கமும் பார்டர் போட்ட மாதிரி வர ஹாஸ்பிடலின் பாலீஷ் செய்யப்பட்ட கருங்கல் வராந்தாவில் நடந்தார்கள். யோகேஷ் கேட்டான்.

''ஸார்... சம்பவம் எப்போது நடந்தது?''

''ஒரு மணி நேரத்திற்கு முன்னால்.''

''சுட்ட நபர்களை உங்களுக்கு அடையாளம் தெரியுமா?''

''சுட்டவர்கள் யாரென்று தெரியவில்லை. அவர்களைப் பிடிக்கப் போலீஸ் முழு மூச்சோடு இயங்கிக் கொண்டிருக் கிறது.''

வராந்தாவின் '∴' வடிவத்தைக் கடந்து வெள்ளைப் பெயிண்ட் அடிக்கப்பட்ட அதி சுத்தமான ஓர் அறைக்குள் நுழைந்

தார்கள். தோளில் மின்னும் நட்சத்திர விருதுகளோடு இரண்டு போலீஸ் அதிகாரிகள், நாற்காலிகளில் உட்கார்ந்திருக்க சார் ஜெண்ட்கள் அட்டென்ஷனில் போய் நின்று மலாய் மொழி யில் ஏதோ சொன்னார்கள். அதிகாரிகளில் ஒருவர் எழுந்து யோகேஷையும் புவனேஷையும் பார்த்து-

''ப்ளீஸ் கம்'' என்றபடி பக்கத்து அறைக்குள் கூட்டிப் போனார். அறைக்குள் நடுவே இருந்த கட்டிலில் - வெள்ளை விரிப்பால் - மூடப்பட்டிருந்த உருவத்தை நெருங்கி - விரிப்பை நீக்கினார்.

ரத்தச் சகதியில் பிரணவ் தெரிந்தார்.

போலீஸ் அதிகாரி கேட்டார்.

''இவர் பிரணவ்தானே?''

''ஆமாம்!''

விரிப்பால் மறுபடியும் உடம்பை மூடிவிட்டு ''வாருங்கள்'' என்று சொல்லி முன் அறைக்குக் கூட்டி வந்தார். நாற்காலிகளைக் காட்டி உட்காரச் சொல்லி விட்டு - மெல்லிய குரலில் கேட்டார்.

''உங்களுக்கு பிரணவை எப்படித் தெரியும்?''

யோகேஷ் சொன்னான். ''அவர் என் அப்பாவின் நண்பர்.''

''நீங்கள் இருவரும் சகோதரர்கள்?''

''ஆமாம்.''

''பிரணவ் இறப்பதற்கு முன் உங்களிடம் பேச வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல வேண்டும் போல் தவித்தார். அது என்னவாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?''

யோகேஷும் புவனேஷும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு யோகேஷ் மட்டும் வாயைத் திறந் தான்.



''எங்களுடைய அப்பா மார்த்தாண்டம் நேற்று இரவு மாரடைப்பில் காலமாகிவிட்டார். அவருடைய உடலை உடனடியாக இந்தியாவுக்குக் கொண்டு போகும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருந்தோம். பிரணவ் அதற்கு உதவுவதாகச் சொல்லியிருந்தார். ஒரு வேளை அதைப் பற்றி ஏதாவது சொல் வதற்காக இருக்கலாம்'' - சொன்ன யோகேஷை சில விநாடிகள் பார்த்துக் கொண்டிருந்து விட்டு-சார்ஜெண்ட் கேட்டார்.

''பிரணவை யார் கொன்றிருப்பார்கள் என்று நினைக் கிறீர்கள்?''

''தெரியவில்லை...''

போலீஸ் அதிகாரிகளில் ஒருவர் தன் கையிலிருந்த டயரியை விரித்து வைத்துக் கொண்டு யோகேஷை ஏறிட்டார்.

''நகரில் நேற்றைக்கு நடந்த வைரத் திருட்டு சம்பந்தமாய் - போலீஸார் சேகரித்த சில தகவல்களில் பிரணவின் கார் நெம்பரும் ஒன்று. செண்டோஸா மலைப் பாதையில் - விபத் துக்குள்ளான ஸ்தலத்தில் அவருடைய காரைப் பார்த்திருக் கிறார்கள்.''

''அதனால்?''

''அந்த வைரத் திருட்டை நடத்தியவர்களே இந்தக் கொலையைச் செய்திருக்கலாம் என்பது போலீஸாரின் எண் ணம்...''

யோகேஷும் புவனேஷும் மௌனம் சாதித்தார்கள். போலீ ஸாரின் கூர்மையான பார்வையைத் தாங்கிக் கொள்ள முடி யாமல் - தங்களின் பார்வைகளைத் தாழ்த்தினார்கள்.

போலீஸ் அதிகாரி தொடர்ந்தார். ''மிஸ்டர் யோகேஷ்! அண்ட் மிஸ்டர் புவனேஷ்! பிரணவ் உங்களுக்கு நண்பர். அவரைக் கொன்றவர்களை அடையாளம் காட்டுவது உங்கள் கடமை.''

யோகேஷ் நிமிர்ந்தான். ''ஸாரி ஸார்... பிரணவை எங்களுக்கு இந்த மூன்று நாட்களாகத்தான் தெரியும். அதுவும் அப்பாவின் நண்பர் என்கிற முறையில்தான் எங்களுக்குத் தெரியும்.''

''அவருடைய காரில்தானே நீங்கள் செண்டோஸா போனீர்கள்?''

''ஆமாம்.''

''விபத்துக்குள்ளான அந்த நீலநிறக் காரை நீங்கள் பார்க்கவேயில்லையா?''

''இல்லை.''- என்று தீர்க்கமாய்த் தலையாட்டிய - புவனேஷ் போலீஸ் ஆபீஸரைச் சற்று துணிச்சலாய் ஏறிட்டான்.

''ஸார்... நானும் என் சகோதரனும் - எங்கள் தந்தை இறந்த துக்கத்தில் இருக்கிறோம். இறந்த உடலைச் சொந்த நாட்டிற்குக் கொண்டு போக வேண்டிய ஒரு தவிப்பில் இருக்கிறோம். இந்த நிலையில் நீங்கள் விசாரணை என்கிற பெயரில் எதை எதையோ கேட்பது மனசுக்குக் கலக்கமாக உள்ளது. பிரணவ் கொலை செய்யப் பட்டிருப்பது ஓர் அதிர்ச்சியான விஷயம் தான். ஆனால் அவரைக் கொன்றவர்கள் யார் என்பது எங்களுக்குத் தெரியாது.''

போலீஸ் அதிகாரி சில விநாடிகள் வரைக்கும் ஒன்றும் பேசாமல் இருந்துவிட்டு - பின் வாயைத் திறந்தார். ''இந்தியாவுக்கு நீங்கள் எப்போது புறப்பட்டுப் போகப் போகிறீர்கள்?''

''இன்று இரவு பத்து மணி விமானம்.''

''விமான நிலைய அதிகாரிகளிடம் ஒப்புதல் வாங்கிவிட்டீர்களா?''

''ஏறக்குறைய வாங்கியாயிற்று. போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டையும், டெத் சர்ட்டிபிகேட்டையும் கொடுத்தால் பயணம் உறுதியாகிவிடும்.''



''சரி... நீங்கள் போகலாம். உங்களிடமிருந்து எங்களுக்கு ஏதேனும் தகவல் தேவைப்படுமானால் 'இண்டர் போல்' மூலமாகத் தொடர்பு கொள்வோம். தகவல் தந்து உதவ வேண்டும்.''

''கண்டிப்பாக.''

ஹாஸ்பிடலுக்கு வந்து சேர்ந்த பின்பும் படபடப்பு நீங்கவில்லை யோகேஷுக்கும், புவனேஷுக்கும். உள்ளுக்குள் இருதயங்கள் உச்சபட்சத் துடிப்பில் இருந்தன. புவனேஷ் குரல் நடுங்கச் சொன்னான்.

''யோகேஷ்! நாம் சிங்கப்பூரில் இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்துதான்.''

''பிரணவைக் கொலை செஞ்சது யாராயிருக்கும்ன்னு நீ நினைக்கிறே?''

''அந்த வைரத் திருட்டைப் பண்ணினவங்கதான்.''

''என்னால அப்படி நினைக்க முடியலை. கொலை பண்ணினது அவங்களா இருந்தால் மொதல் குறி நம்ம மேல்தான் வெச்சிருப்பாங்க.''

''அப்போ... இது... யாரு?''

''பிரணவுக்குத் தொழில் எதிரிகள் யாராவது இருந்து இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்கலாம்.''

''சரி! பிரணவ் விவகாரத்தை விடு. நம்ம கைவசம் இருக்கிற வைரங்களை அப்பாவோட உடம்புல எப்படி மறைச்சு வைக்கப் போறோம்...?''

''டாக்டரிடம் கேட்டு மார்ச்சுவரிக்குப் போவோம்... சமயமும், சந்தர்ப்பமும் வாய்ச்சா பாடியில் டயமண்ட்லை மறைச்சு வெப்போம்...''

''ஒரு சின்ன திருத்தம்.''

''என்ன?''

''டாக்டர்கிட்டே பர்மிஷன் வாங்காமலேயே மார்ச்சுவரிக்குப் போகலாம். ஆள் யாரும் பார்க்காத நேரத்துல உள்ளே போய்... காரியத்தை முடிப்போம்.''

''வேண்டாம்... இது ரிஸ்க்...''

''ரிஸ்க் எடுத்துத்தான் ஆகணும் புவனேஷ். டாக்டர் கிட்டே பர்மிஷன் வாங்கி மார்ச்சுவரிக்குப் போகிறதாக இருந் தால் - நர்ஸ் எவளாவது கூட வருவாள். குறிப்பிட்ட நிமிஷம் வரைக்கும்தான் பர்மிஷன் இருக்கும். அப்புறம் வெளியே வந்துட வேண்டியதுதான்....''

''மார்ச்சுவரிக்குள் திருட்டுத்தனமாய்ப் போலாம்ன்னு சொல்றியா?''

''ஆமா... புறப்படு!'' சொல்லிக் கொண்டே யோகேஷ் நடக்க ஆரம்பித்துவிட புவனேஷும் தொடர்ந்தான்.

அந்த மத்தியான நேரத்தில் ஹாஸ்பிடல் கொஞ்சம் சோம்ப லாயிருந்தது. பெரும்பாலான அறைகள் சாத்தியிருந்தன. ஏதாவது ஒரு கோடியில் நர்ஸ்களின் வெள்ளுடுப்பு யூனி பார்ம் விநாடிக்கும் குறைவான நேரத்தில் தெரிந்து மறைந்தது.

யோகேஷும், புவனேஷும் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு - நிதானமாய் நடையிட்டு - மார்ச்சுவரிக்கு வந்தார்கள்.

அறைக்கதவுக்கு முன்பாக நின்றார்கள்.

''யோகேஷ்.''

''ம்...''

''நீ கதவை மறைச்ச மாதிரி நில்லு.''

நின்றான்.

புவனேஷ் கதவை இழுத்துப் பார்த்தான். இறுகச் சாத்தப் பட்டிருந்தது.''... சே! கதவு லாக்காயிருக்கு.''



''நல்லா இழுத்துப் பாரு.''

''பார்த்துட்டேன். நெம்பர் லாக் சிஸ்டம் போலிருக்கு.''

''என்ன பண்ணலாம்?''

''மார்ச்சுவரிக்குப் பின்பக்கமா... கம்பியில்லாத இரண்டு கண்ணாடி ஜன்னல் இருக்கு. ஜன்னல் சாத்தாமே இருந்தா... நாம உள்ளே போயிடலாம்.''

''வா...''

பின்பக்கமாய் வந்தார்கள்.

ஐந்தடி - மூன்றடி நீள அகலங்களில் இரண்டு கண்ணாடி ஜன்னல்கள் தெரிய - தள்ளிப் பார்த்தார்கள். ஒன்று லேசாய் நெகிழ்ந்தது.

''புவனேஷ்! இதனோட லாக் சரியாய் போடப்படலை. ஜன்னலுக்கு மேலே இருக்கிற வெண்டிலேட்டர் வழியா - கையை நுழைச்சு, லாக்கை எடுத்து விட்டா ஜன்னலைத் திறந்துடலாம்...''

''வெண்டிலேட்டர் கைக்கு எட்டாதே?''

''என் கை மேல ஏறி நில்லு... வெண்டிலேட்டர் எட்டும்.''

புவனேஷ் வியர்த்து வழிந்து கொண்டு - எச்சில் விழுங்கி - சுற்றும் முற்றும் பார்த்தான்.

கட்டிடத்தின் எந்தத் திசையிலும் மனித நடமாட்டமே இல்லை.

''பயப்படாமே ஏறு...'' யோகேஷ் குனிந்து கொள்ள அவன் கைமேல் தாவி ஏறி கொஞ்சங் கொஞ்சமாய் உயர்ந்து வெண்டிலேட்டரின் இடுக்குக்குள் கையை நுழைத்து ஜன் னலின் லாக்கை விடுவித்தான் புவனேஷ்.

ஜன்னல் திறந்து கொண்டதும் கீழே குதித்தான்.

யோகேஷ் கிசுகிசுத்தான்.

''நீ உள்ளே போய்க் காரியத்தை முடி... நான் வெளியே நின்று யாராவது வர்றாங்களான்னு பார்த்துக்கிறேன்.''

புவனேஷ் ஜன்னலில் தொற்றி ஏறி - உள்ளே நுழைந்தான். மார்ச்சுவரி ஜில்லிப்பாய் உடம்பைத் தாக்கியது.

வெளியே நின்றிருந்த யோகேஷ் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு ஜன்னலை வெறுமனே சாத்திக் கொண்டான்.

விநாடிகள் பயமாய்க் கரைந்தன.

மார்ச்சுவரியின் உள்ளேயிருந்து சின்னச் சின்னதாய் ஏதோ சத்தங்கள். யோகேஷ் தவிப்பாய்க் காத்திருந்தான்.

முழுசாய் ஐந்து நிமிஷம் நழுவியிருந்த போது-

யோகேஷின் முதுகுக்குப் பின்னால் அந்தக் குரல் கேட்டது. பெண் குரல்.

''எக்ஸ்க்யூஸ் மீ...''

திரும்பினான்.

நர்ஸ் ஒருத்தி கோபச் சிவப்போடு நின்றிருந்தாள்.

## 12

அந்த எக்கச்சக்கமான சந்தர்ப்பத்தில் நர்ஸைப் பார்த்ததும் வாய் உலர்ந்து போனான் யோகேஷ். நர்ஸ் அதே கோபத்தோடு கேட்டாள். அவளுடைய பிங்க் நிற முகம் செக்கர் வான நிறத்துக்கு மெல்ல மெல்லப் போயிற்று.



''இங்கே நின்று கொண்டு என்ன செய்கிறீர்கள்...?''

''ஓ... ஒன்றுமில்லை. ஆஸ்பத்திரியைச் சுற்றிப் பார்ப்பதற்காக வந்தேன்.''

''இது... பார்வையாளர்களுக்குத் தடை செய்யப்பட்ட பகுதி. இங்கே ஆஸ்பத்திரி ஊழியர்களைத் தவிர வேறு யாரும் வரக்கூடாது.''

''மன்னிக்கவும்... இந்த விதி முறைகள் எனக்குத் தெரியாது...''

''தயவு செய்து முன் பக்கம் போய்விடுங்கள். டாக்டர் பார்த்தால் உங்களை ஒன்றும் சொல்லமாட்டார். என்னைத்தான் தண்டிப்பார்.''

யோகேஷ் நகர்ந்தான். வேக வேகமாய் நடந்து வந்து ஆஸ்பத்திரியின் முன்பகுதியைத் தொட்டு நின்று கொண்டான். பின்னங்கழுத்தில் வியர்வை ஊறியது.

'நானும் நர்ஸும் பேசியது நிச்சயமாய் உள்ளேயிருந்த புவனேஷ் காதில் விழுந்திருக்கும். இந்நேரம் அவன் உஷாராகி யாரும் பார்க்காத நேரத்தில்தான் வெளியே வருவான்.'

விரல் நகங்களைக் கடித்துக் கொண்டு தவிப்பாய்க் காத்திருந்தான் யோகேஷ்.

சுத்தமாய்ப் பத்து நிமிஷம் கழித்து புவனேஷ் வேக வேகமாய் வந்தான். யோகேஷ் உதடு உயரக் கேட்டான். ''என்னாச்சு?''

''வெச்சுட்டேன்''

''வெச்சுட்டேன்னா... எங்கே வெச்சே?''

''அப்பாவோட கழுத்துப் பாகத்திலிருந்து பாண்டேஜை அவிழ்த்து டயமண்ட்ஸ் பூராவையும் அங்கே வெச்சுக் கட்டியிருக்கேன்.''

''பாண்டேஜ் கட்டுல வித்தியாசம் வராமே கட்டினியா?''

"ஆமா! அதனால்தான் இவ்வளவு நேரம். அந்த நர்ஸ் பயங்கரமாச் சத்தம் போட்டுட்டிருந்தா... போயிட்டாளா?"

"ம்... போயிட்டா..."

"ஏதும் சந்தேகமா நினைச்சுடலையா?"

"ஊ...ஹு...ம்..."

யோகேஷ் தலையாட்டிக் கொண்டிருக்கும் போதே - பக்கத்தில் இருந்த - ஹாஸ்பிடல் ரிசப்ஷனிஸ்ட் யோகேஷை யும் புவனேஷையும் பார்த்துக் கையசைத்துக் கூப்பிட்டாள்.

இருவரும் வேகவேகமாய்ப் போனார்கள்.

ரிசப்ஷனிஸ்ட் சுத்தமான பெரிய பெரிய பற்களில் சிரித்து - "உங்களுக்கு போன்" - என்று சொல்லி டெலிபோன் ரிஸீவரை நீட்டினாள்.

யோகேஷ் ரிஸீவரை வாங்கி, "ஹலோ" என்றான்.

"மிஸ்டர் யோகேஷ்?"

"எஸ்..."

"ஏர்ஃபோர்ட் டைம்ஸ் எக்ஸ்பிரஸ்ஸிலிருந்து பேசுகிறோம்."

"சொல்லுங்கள் ஸார்."

"இரவு பத்து மணி விமானத்தில் உங்களுக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எட்டு மணிக்கே டெட்பாடியோடு - நீங்கள் ஏர்ஃபோர்ட்டுக்கு வந்து விட வேண்டும்.

"அவ்வளவு முன்னதாக வரவேண்டுமா?"

"ஆமாம்" என்ற குரல் தொடர்ந்தது. "டெத் சர்ட்டிபிகேட், போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் ஞாபகமாகக் கொண்டு வர வேண்டும்."

"ஏற்கனவே சொல்லியிருக்கிறீர்கள்."



"இந்த இறந்த உடல் பயண ஏற்பாடுகளுக்காக - எங்களுக்கு நீங்கள் செலுத்த வேண்டிய தொகை ஆயிரத்து இருநூறு டாலர். ஏர்போர்ட் வந்ததுமே செலுத்தி விட வேண்டும்."

"செலுத்தி விடுகிறோம்."

"மெட்ராஸ் ஏர்போர்ட்டில் நீங்கள் யாருக்காவது தகவல் கொடுக்க விரும்புகிறீர்களா?"

"இல்லை."

"டெட் பாடியோடு ஏர்போர்ட் வருவதற்கு முன்னால் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுமானால் எங்களுக்கு டெலிபோன் செய்யுங்கள்."

"நன்றி."

ரிஸிவரை வைத்துவிட்டு - யோகேஷ் பெருமூச்சு விட்டான். "அப்பா உடம்போட மெட்ராஸ் போய்ச் சேர்றதுக்குள்ளே - நீயோ நானோ செத்துடுவோம் போலிருக்கு."

ரிசப்ஷனிஸ்ட் கேட்டாள்.

"நீங்கள் என்ன மொழியில் பேசுகிறீர்கள்?"

"தமிழ்"

"டெமில்?"

"நோ... தமிழ்."

"டமில்."

"எஸ்."

"நிரம்பவும் கஷ்டமான மொழியோ? பேசும் போது சிரமப்படுகிறீர்கள்! எங்கள் மொழியில் பேசிப் பாருங்கள். பியானோ வாசிப்பது போல் இருக்கும்" - சொல்லிவிட்டுச் சிரிக்க முயன்றவள் அந்தப் பக்கமாய் டாக்டர் வருவதைப்

பார்த்து - தன் சோழிப் பற்களைச் சட்டென்று மூடிக் கொண்டாள். யோகேஷும் புவனேஷும் மெதுவாய் நகர்ந்தார்கள்.

சாயந்தரம் ஏழு மணி.

மார்ச்சுவரியிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டார் மார்த்தாண்டம். ஆஸ்பத்திரியில் சடங்குகளை முடித்துக் கொண்டு - மார்த்தாண்டத்தோடு ஆஸ்பத்திரி வேனில் ஏறினார்கள் யோகேஷும் புவனேஷும். இருவரின் உடம்புகளிலும் நிறையப் பதட்டம்.

வேன் புறப்பட்டது.

''யோகேஷ்! ஒரு கண்டத்தைத் தாண்டிட்டோம்.''

''இனிமே கவலையில்லை. எந்தக் கண்டம் வந்தாலும் தாண்டிடலாம்'' சிக்னல்களைச் சமாளித்து ஊர்ந்து - வேன் சாங்கி ஏர்ஃபோர்ட் வாசலைத் தொட்ட போது 7.45 மணி. காத்திருந்த டைம்ஸ் எக்ஸ்பிரஸ் ஆசாமிகள் - ஸ்ட்ரெச்சரோடு டெட்பாடியை ஏந்திக் கொண்டார்கள்.

யோகேஷ் கேட்டான். ''உடலை இப்போதே விமானத்திற்குள் கொண்டு போய்விடுவீர்களா?''

''இல்லை. இந்த ஏர்போர்ட்டில் ஒரு ஹாஸ்பிடல் இருக்கிறது. அங்கே இருக்கும் மார்ச்சுவரியில் உடலை வைத்து விடுவோம். விமானம் புறப்பட அரை மணி நேரம் இருக்கும் போது - கன்டெய்னரில் பாடியை வைத்து - ஏற்றி விடுவோம்'' சொல்லியபடி - மார்த்தாண்டத்தை ரோலிங் ஸ்ட்ரெச்சரில் வைத்து தள்ளிக் கொண்ட போனார்கள். யோகேஷ், புவனேஷ் இரண்டு பேரையும் பார்த்து - டைம்ஸ் எக்ஸ்பிரஸ் கௌன்ட்டரிலிருந்த - அந்தப் பரிச்சயமான இளைஞன் சிநேக பூர்வமாய் சிரித்தான்.

''சொன்ன நேரத்துக்கு வந்து விட்டீர்களே! நன்றி.''



''உங்களுக்கு... நாங்கள் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும்?''

''ஆயிரத்து இருநூறு டாலர்.''

யோகேஷ் கண்ணைக் காட்ட புவனேஷ் பணத்தை எடுத்துக் கொடுத்தான். டெத் சர்ட்டிபிகேட், போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் சரி பார்க்கப்பட்டதும் அலுவலக ஸ்டாம்ப் முத்திரைகளைக் குத்தினார்கள்.

அந்த இளைஞன் எழுந்தான்.

''என்னோடு... வாருங்கள்.''

''எங்கே?''

''விமான நிலையத் தலைமை அதிகாரியிடம் இதைக் காட்டி ஒப்புதல் பெற வேண்டும்.

யோகேஷும் புவனேஷும் ஒருத்தரையொருத்தர் கொஞ்சம் பயத்தோடு பார்த்துக் கொண்டார்கள்.

''என்ன பார்க்கிறீர்கள்?''

''அவர் ஏதும் மறுப்புச் சொல்லி விட மாட்டாரே?''

''அது உங்கள் நேரத்தைப் பொறுத்தது''-அந்த இளைஞன் புன்னகைத்துக் கொண்டே முன்னால் நடக்க - பின்னால் தொடர்ந்த இருவருக்கும் வயிற்றில் புளியைக் கரைத்தது.

காரிடாரில் நடந்து - லிப்ட்டில் உயர்ந்து மூன்றாம் மாடிக்குப் போனார்கள். எல்லாமே ட்யூப்லைட் வெளிச்சம் நிரம்பிய கண்ணாடி அறைகள். சீனத்தனமான முகங்களில் விதவிதமான யூனிபார்ம்களில் அதிகாரிகள். தீவிரமாய் உரையாடும் வாயசைப்புகள்.

கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு ஓர் அறைக்குள் நுழைந்தார்கள். கொக்கு நிற யூனிபார்மில் நுழைந்திருந்த

அந்த உயரமான அதிகாரி இண்டர்காமில் பேசிக் கொண்டே நாற்காலிகளைக் காட்டினார்.

அவர்கள் உட்கார்வதற்குள் -

அதிகாரி பேச்சை முடித்துக் கொண்டு - ''எஸ்...'' என்றார். டைம்ஸ் எக்ஸ்பிரஸ் இளைஞன் - கையில் வைத்திருந்த ரிப்போர்ட்களை நீட்டி விபரம் சொல்ல - அவர் அதை வாங்கிப் பார்த்துவிட்டு - யோகேஷிடம் நிமிர்ந்தார்.

''எப்போது இறந்தார்?''

''நேற்று நடுநிசியில்.''

''பாடியை ஏர்போர்ட் மார்ச்சுவரிக்குக் கொண்டு வந்து விட்டீர்களா?''

''ஆமாம்...''

அதிகாரி இண்டர்காமின் பட்டனைத் தட்டினார்.

''டாக்டர் லிஸ்... ஸீ! ஒரு நிமிஷம் என்னுடைய அறைக்கு வருகிறீர்களா?'' - சொல்லி விட்டு - நாற்காலிக்கு சாய்ந்துக் கொள்ள - அடுத்த சில நிமிடங்களில் டாக்டர் லிஸ் - ஸீ - வெண்ணையை உருட்டின சைஸில் குள்ளமாய் வந்தார். அதிகாரி போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை நீட்டிக் கொண்டே சொன்னார்.

''மெட்ராஸ் போக வேண்டிய உடல். பி.எம். பாருங்கள்.''

அவர் பார்த்து விட்டு முறுவலித்தார்.

''நேச்சுரல் டெத் என்று சர்ட்டிபை பண்ணியிருக்கிறார்கள்.''

''நீங்கள் ரீ-போஸ்ட் மார்ட்டம் பண்றதாயிருந்தா பண்ணலாம். இன்னும் ஃபிளைட்டுக்கு இரண்டு மணி நேரம் இருக்கிறது.''

''ரீ-போஸ்ட் மார்ட்டமா?'' யோகேஷும் புவனேஷும் அதிர்ந்து போய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். முகங்கள் நிறமிழந்து போயிருந்தன.



டாக்டர் லிஸ்-ஸீ அவர்களை ஏறிட்டார். ''அரசாங்க ஆஸ்பத்திரிகளில் செய்யப்படும் போஸ்ட்மார்ட்டங்களை நாங்கள் ஐம்பது சதவீதம் மட்டுமே நம்புவோம். உங்கள் தந்தையின் உடலை மறுபடியும் போஸ்ட்மார்ட்டம் செய்து பார்க்க வேண்டும்.''

புவனேஷ் வியர்த்துக் கொண்டே பதட்டமாய் எழுந்தான். ''டாக்டர்! என் தந்தையின் இறப்பு மாரடைப்பின் காரணமாய் ஏற்பட்டது. இதில் உங்களுக்கு எந்தச் சந்தேகமும் வேண்டாம். அந்த உடலை மறுபடியும் மறுபடியும் போஸ்ட்மார்ட்டத்திற்கு உட்படுத்துவது மனதிற்கு கஷ்டமாக உள்ளது.''

டாக்டர் புன்னகைத்தார்.

''கவலைப்படாதீர்கள். போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட்ட உடல் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக நாங்கள் ஏற்பாடு செய்வோம். நீங்கள் மெட்ராஸுக்குக் கொண்ட போய் இரண்டு நாள் வைத்திருந்தாலும் உடம்பு கெடாது.''

யோகேஷும், புவனேஷும் திக்பிரமையடித்துப் போய் உட்கார்ந்திருக்க அதிகாரி டாக்டரிடம் சொன்னார். ''நீங்கள் ஒரு மணி நேரத்தில் போஸ்ட்மார்ட்டம் அனுப்புங்கள் டாக்டர். நான் காத்திருக்கிறேன்.''

தலையாட்டிவிட்டு டாக்டர் வேகமாய் நகர்ந்து போக டைம்ஸ் எக்ஸ்பிரஸ் இளைஞனை அதிகாரி ஏறிட்டார்.

''இவர்கள் உங்கள் அலுவலகத்திலேயே இருக்கட்டும். போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் கைக்கு வந்ததும் தொடர்பு கொள்கிறேன்.''

''எஸ்.... ஸார்.''

டைம்ஸ் எக்ஸ்பிரஸ் இளைஞன், யோகேஷ் - புவனேஷ் இருவரையும் வெளியே கூட்டிக் கொண்டு வந்தான். வெளியே வந்ததும் யோகேஷ் அந்த இளைஞனிடம் கேட்டான்.

''இந்த இரண்டாவது போஸ்ட்மார்ட்டத்தைத் தடுக்க முடியாதா?''

''முடியாது.''

டைம்ஸ் எக்ஸ்பிரஸில் உட்கார்ந்திருந்த யோகேஷுக்கும், புவனேஷுக்கும் வியர்வை நிற்காமல் வழிந்தது. ஏர்போர்ட் பூராவும் அசாதாரணப் பரபரப்பு தொற்றியிருந்தது.

''யோகேஷ்! எந்த நிமிஷமும் அந்த டாக்டர் போலீஸோடு வந்துடலாம்...'' -புவனேஷ் கிசுகிசுத்தான்.

''ஏர்போர்ட் ஹாஸ்பிடல்ல ரெண்டாவது போஸ்ட்மார்ட்டம் நாம் எதிர்பார்க்காத ஒண்ணு. பிரணவ்க்கு இந்த விதிமுறை எப்படித் தெரியாமப் போச்சு?''

''ஒரு வேளை அவருக்கே தெரியாமே இருந்திருக்கலாம்.''

''சரி... இப்ப... என்ன பண்ணலாம்?''

''எனக்கு அடிவயிறு ஏகமாகக் கலங்கிட்டிருக்கு. என்ன யோசிச்சாலும் நாம தப்பிக்கப் போறதில்லை. நாம் அந்த வைரங்களுக்கு ஆசைப்பட்டிருக்கக் கூடாது.''

விநாடிகளை நிமிஷங்கள் கொன்று குவிக்க-

மணி ஒன்பது பத்து - ஆன போது-

சிவப்பு நிற - டெலிபோன் கூப்பிட்டது. டைம்ஸ் எக்ஸ்பிரஸ் இளைஞன் ரிஸீவரை எடுத்துப் பேசி விட்டு - யோகேஷையும், புவனேஷையும் பார்த்தான்.

''அதிகாரி கூப்பிடுகிறார் - வாருங்கள் போகலாம்.'' இருவரின்-இருதயங்களும்-தாளம் தப்பித் துடித்தன.

லிப்ட்டில் உயர்ந்து - அந்த அதிகாரிக்கு முன்னால் போய் நின்றார்கள்.

அவர் புன்னகையோடு பார்த்தார். ''எங்கள் அப்பாவின் உடலை இரண்டாவது தடவையாக போஸ்ட்மார்ட்டம் செய்யா



தீர்கள்-என்று நீங்கள் எந்த நேரத்தில் கேட்டுக் கொண் டீர்களோ தெரியாது. ஏர்போர்ட்டின் வடக்குப் பகுதியில் நேரிட்ட தீ விபத்து ஒன்றில் - காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு டாக்டர் குழு அங்கே போக வேண்டி வந்து விட்டது. எனவே உங்கள் தந்தையின் உடல் இரண் டாவது தடவை போஸ்ட்மார்ட்டம் செய்யப்படவில்லை. ஏற்கெனவே உள்ள போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்படி - உங்கள் தந்தையின் மரணம் இயற்கையான மரணம்தான் - என்று முடிவு செய்து - உடலை விமானத்தில் ஏற்ற அனு மதிக்கிறேன். '' ரிப்போர்ட்டில் கையெழுத்திட்டு நீட்டினார்.

புவனேஷும், யோகேஷும் மலர்ந்தார்கள்.

''தாங்க்யூ ஸார்.''

விமானத்தில் ஏறி உட்கார்ந்திருந்தார்கள் யோகேஷும், புவனேஷும். உள்ளே இருந்த கன்டெய்னரில் மார்த்தாண் டத்தின் உடல் ஏற்றப்பட்டிருந்தது. உள்ளேயிருந்த பிரயாணி கள் புத்தகங்களை மேய்ந்து கொண்டிருக்க - பார்வைகளா லேயே மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டார்கள் இருவரும்.

''இரண்டாவது போஸ்ட்மார்ட்டம் என்கிற கண்டத் தையும் தாண்டிட்டோம்'' - யோகேஷ் சிரித்தான்.

''கடவுள் நம்ம பக்கம்''

புவனேஷ் இன்னமும் பெரிதாகச் சிரித்தான்.

''இன்னும் பத்தே நிமிஷம்! ஃபிளைட் கிளம்பிடும்.''

காத்திருந்தார்கள்-கொஞ்சம் தவிப்பாய்.

நேரம் 9.53.

9.55.

9.58.

10.00 மணி.

விமானம் ரீங்கரித்தது. சீட் பெல்ட்டுகளை அணிந்து கொள்ளச் சொல்லியும், சிகரெட் பிடிக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டும்-அறிவிப்புகள் ஒளிர்ந்தன.

விமானம் நகர்ந்தது.

கொஞ்சம் கொஞ்சமாய் வேகம் பிடித்து - ரன் வேயைத் தேய்த்து-இருட்டான ஆகாயத்தில் எம்பியது.

யோகேஷும், புவனேஷும் பரஸ்பரம் கைகுலுக்கிக் கொண்டார்கள். கண்களில் சந்தோஷ நீர் மின்ன, 'ஹம்மாடி!' என்று சொல்லி சீட்களுக்குச் சாய்ந்து கொண்டார்கள். நெஞ்சை நீவிக் கொண்டார்கள்.

அந்த சந்தோஷம் இரண்டே நிமிஷந்தான்.

விமானத்தின் உள்ளே-

அந்த அறிவிப்பு ஒளிர்ந்தது.

"தவிர்க்க முடியாத காரணத்தினால் விமானம் மறுபடியும் விமான நிலையத்திற்கே திரும்புகிறது."

யோகேஷும், புவனேஷும் முகம் மாறினார்கள். அவர்கள் திகைத்துக் கொண்டிருக்கும்போதே - விமானம் கீழே தாழ்ந்து - ரன்வேயைப் பற்றிக் கொண்டு ஊர்ந்து பழைய இடத்துக்கே வந்து நின்றது. அடுத்த சில விநாடிகளில்-

ஸ்டேர்ஸ் பொருத்தப்பட-

கருநீல யூனிபார்மோடு - சிங்கப்பூர் போலீஸ் துணை கமிஷனர் - இரண்டு சார்ஜெண்ட்களோடு உள்ளே வந்தார். யோகேஷையும் புவனேஷையும் நெருங்கினார்.

"ஸாரி... ஜெண்டில்மென்... எழுந்து வெளியே வருகிறீர்களா?"

"ஏ... ஏன்?"



"வைரத் திருட்டு சம்பந்தமாய் உங்களை விசாரிக்க வேண்டியிருக்கிறது."

யோகேஷ் போலித் திகைப்போடு கத்தினான். "வைரத் திருட்டா? என்ன உளறுகிறீர்கள்?"

துணைக் கமிஷனர் புன்னகைத்தார். "பிரணவ் எல்லா உண்மைகளையும் சொல்லி விட்ட பிறகு - நீங்கள் எதற்காக நடிக்க வேண்டும்?"

இருவரும் சட்டென்று நிமிர்ந்தார்கள். "பிரணவ்தான் இறந்து விட்டாரே?"

"மறுபடியும் ஸாரி ஜெண்டில்மென்! பிரணவ் சுடப்பட்டது உண்மை. பிரணவைப் பிடிக்காத யாரோ... ஒருவன் அவரைச் சுட்டுவிட்டு ஓடியபின் - அவரை ஆஸ்பிடலில் கொண்டு போய்ச் சேர்த்தோம். அவரைக் காப்பாற்றி விடலாம் என்று டாக்டர்கள் சொன்னார்கள். நாங்கள் ஏதேச்சையாக அவர் பாக்கெட்டைச் சோதனையிட்டபோது - ஒரு 'வைரக்கல்' கிடைத்தது. அதுவும் அந்த வைரக்கல், திருட்டுப் போன வைரக் கற்களைச் சேர்ந்தது என்று முடிவானதும் - அவர் இறந்துவிட்டதாகப் புரளியைக் கிளப்பி நாங்கள் சந்தேகப்பட்ட ஒவ்வொருவரையும் விசாரிக்க ஆரம்பித்தோம். உங்களையும் விசாரித்தோம். ஆனால் பயனில்லை. துப்பாக்கியால் சுடப்பட்ட பிரணவிற்கு-பதினைந்து நிமிஷங்களுக்கு முன்புதான் நினைவு திரும்பியது. வைரத்திருட்டை நடத்தியது நீங்கள்தானே... என்று மிரட்டினோம். அவர் பயந்து போய் உங்களைப் பற்றிய தகவல்களைச் சொன்னார். உங்கள் தந்தையின் வாயில்-மறைத்து வைக்கப்பட்டிருந்த வைரங்களைப் பற்றியும் சொல்லி விட்டார். உடனடியாய் விமான நிலையத்திற்குத் தகவல் கொடுத்து ஏறக்குறையத் தப்பிவிட்ட நிலைமையில் இருந்த உங்களை - மறைத்து வானத்திலிருந்து கீழே கொண்டு வந்தோம்."

யோகேஷும் புவனேஷும் அயர்ந்து போய்ப் பார்க்க அவர் தொடர்ந்தார். ''உங்களுக்கு இன்னொரு கசப்பான செய்தி சொல்லட்டுமா? செண்டோஸா மலைப்பாதையில் விபத்து நடந்துபோது - உங்களுக்கு சிக்கிய வைரங்கள் போலியானவை. கொள்ளையடிக்கப்பட்ட உண்மையான வைரங்கள் அந்தப் பெண்ணிடமிருந்து உடனே வேறு யாருக்கோ கை மாறி விட்டது. போலீஸ் கையில் அவள் சிக்கிக் கொண் டாலும் - போலி வைரங்கள்தானே... அவர்களுக்கு கிடைக்கும்? என்பது அவர்களுடைய திட்டம். ஆனால் அந்தக் கார் எதிர்பாராதவிதமாக - விபத்துக்குள்ளாகவே - அந்தப் போலி வைரங்களை நீங்கள் எடுத்துக் கொண்டு விட்டீர்கள். பிரண விடமிருந்த அந்த ஒற்றை வைரக்கல்லை - பரிசோதித்துப் பார்த்த போது தான் இந்த உண்மை தெரிந்தது. உண்மையான வைரத் திருடர்களைப் பிடிக்கும் வரை நீங்கள் சிங்கப்பூரில் இருந்தாக வேண்டும். தயவு செய்து வெளியே வருகிறீர் களா?''

தளர்ந்து போய் யோகேஷும் புவனேஷும்... எழுந்த... அதே விநாடி கன்டெய்னரிலிருந்து மார்த்தாண்டமும் ஸ்ட் ரெச்சர் மூலமாக வெளியேறிக் கொண்டிருந்தார். தொலைவில் சாங்கி ஏர்போர்ட் போலீஸ் அதிகாரிகளோடு காத்திருந்தது.

நாள் :